
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3	இதழ்: 11	ஏப்ரல் - 2022	விலை - ரூ.10/-
VOL:3	ISSUE: 11	APRIL - 2022	Rs. 10/-



காலத்தை வென்ற கருவூர் தேவர்

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-3 மலர்-11 ஏப்ரல் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

இதயமே வெடித்துச் சிதறிவிடும் அளவுக்கு பாரத்தை சுமந்து கொண்டு இருக்கிறாய்! ஒன்றை மறந்து விட்டாய். அந்த இதயத்திற்குள் தான் நான் சிம்மாசனம் போட்டு அமர்ந்துள்ளேன்.

நீ சந்திக்கும் தோல்விகள் உன்னை நிலை குலைய வைத்துள்ளது. உன் முகத்தில் ஒரு கலவரம். நாம் மீண்டு வர முடியாதோ என்று. நீ படும் துயரங்களை நான் அறியமாட்டேனா என்ன? என்னை தூற்றுபவர்களுக்கே நன்மைகளை செய்யும்போது, நானே கதி, என்று சரணாகதி அடைந்திருக்கும் என் பிள்ளையாகிய உனக்கு நான் செய்ய மாட்டேனா?

வினாடியில் உன் தலையெழுத்தை மாற்றும் சக்தி எனக்கிருக்கிறது. இருப்பினும் நான் தாமதிப்பது உனக்கு நிரந்தரமான தீர்வை தரவேண்டும் என்பதற்காகவே. ஒன்றை புரிந்துக்கொள்! நடப்பதை மட்டுமே நான் உனக்கு கூறுவேன்.

உன்னை காப்பாற்ற உனக்கு பக்கபலமாய் இருந்து உன்னுடைய பயணத்தில் நானும் உன்னுடன். பயணிப்பேன். என்றும் அதை மறவாதே!

கண்டிப்பாக உன் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு என் ஆசிகளுடன் நீ ஆனந்தமாக வாழும் நாள் தொலைவில் இல்லை. நல்லது நடக்கும். நல்லதே நடக்கும். நல்லது மட்டுமே நடக்கும். நான் உன்னோடு தான் இருக்கிறேன், எங்கும் எப்போதும், என்றும்!

- பகவான் ஸ்ரீ சாயிபாபா



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து ஐந்தாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 06.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

காலை 6 மணிக்கு ஆசிரியரின் சத் சங்கத்துடன் விழா ஆரம்பமானது. தொடர்ந்து தியானம் நிகழ்ச்சியும், பூஜை யையும், புத்தக வெளியீடும் நிகழ்ந்தன.

இம்மாத இதழை "பாராயணப் பகலவன்" திரு.சுந்தர்சாய் அவர்கள் வெளியிட, சிந்தாதிரிப்பேட்டை S.I திரு. வரதராஜன் அய்யா அவர்களும், வில்லிவாக்கம் பாபா பக்தை திருமதி. பார்வதி அவர்களும், பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில், திரு.அகஸ்டின், திருமதி. தனம் அகஸ்டின், திரு.உமா சங்கர், திரு.சிங்காரவடிவேலு, குரோம் பேட்டை PSBA BOXING FITNESS CLUB நிறுவனர் திரு.அய்யாகண்ணு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

திரு. சுந்தர்சாய் அவர்களும், ஆசி ரியர் அவர்களும், தங்களது அனுபவங் களை பக்தர்களுடன் பகிர்ந்து







கொண்டனர். இம்மாதமும் நமது இதழுக்கு சுவாமிமலை சீரடி சாயி சமுதாய நலக் கூடத்தின் மூலம் 3 சந்தாதாரர்களும், சேலம் கிருஷ்ணன் அவர்கள் 5 சந்தாதாரர்களையும் இணைத்து சாயி சேவை செய்திருக் கின்றார்கள்.

அவர்களும், அவர்களது குடும்பத்தி னர் அனைவரும் பகவான் சாயிநாதரின் அருளால் அனைத்து நலன்களும்





பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றோம்.

உத்திரமேரூர் அருகில் உள்ள மாருதிபுரம் என்று ஊரில், சுவாமி சமர்த்தரின் ஆசியால், திருமதி.மஞ்சரி ரமேஷ்பாபு அவர்களின் பெருமுயற்சி யால் எழும்பிக் கொண்டிருக்கும். ஸ்ரீ சுவாமி சமர்த்த மகராஜ் சேவா சமஸ்த் தான் ஆலயத்திற்கு திரு.சுந்தர்சாய் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்று வந்தது மிகுந்த மனநிறைவைத் தந்தது.

அதே போன்று நமது சாய் தியானா வில் திருமணத்திற்காக பிரார்த்தனை வைத்த திரு.பாலமுருகன் சுமதி ஆகி யோரின் திருமண விழாவில் கலந்து கொண்டதன் மூலம் பகவான் சா யிநாதரின் ஆசியை உணர முடிந்தது.

அதேபோன்று பழனி கணக்கன் பட்டி சுவாமியின் 8 வது சமாதி தினப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் பாக்கியமும், பகவான் சாயிநாதரின் அருளால் கிட்டியது. கணக்கன்பட் டியாரிடம் உலக உயி ரினங்கள் அனைத்தும், அனைத்து நலன்களும் பெற்று உடல் ஆரோக்கியத்துடனும், மனநிம்மதியுடனும் வாழ நமது இதழின் சார்பாக பிரார்த்திக்கப்பட்டது.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.


பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவி யிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

மந்திர விதை



பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரி ஆன்மீக சாதனையில் இக்காலத்திற்கு ஏற்றது மந்திர செபமே! மிகச் சிறந்த, மிக எளிய வழியும் அதுவே! எளியது என்றாலும் மிகவும் சக்திவாய்ந்தது.

உங்கள் உடல் ஆசனங்களையோ, அல்லது கடும் தவத்தையோ செய்வதற்கு ஏற்றதாக இல்லாமல் இருக்கலாம்.

புனித யாத்திரை செல்வதற்கு பொருளாதார வசதி இல்லாது இருக்கலாம். ஆனால் நீங்கள் எப்போதும் மந்திரத்தை செபிக்கலாம். நீங்கள் எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், ஏழையானாலும், பணக்காரராக இருந்தாலும், மந்திரத்தை செபிக்கலாம்.

மந்திரத்தை செபிப்பது என்பது நல்ல விதையை விதைப்பது போன்றது. அது சக்திவாய்ந்த விதை. அதை உங்கள் அகத்தில் ஊன்றினால் வேரூன்றி வளரும். ஆரம்பத்தில் அதை முறையாகவும், கவனமாகவும் பராமரிக்க வேண்டும். அது நாளடைவில் அழகிய, பெரிய தெய்வீக மரமாக வளர்ந்து நிறைய பழங்களைத் தரும். உலகம் முழுவதும் அப்பழத்தை உண்டு மகிழ்வர்.

வேற்றுமையில் ஒற்றுமை



நாம் பார்ப்பதற்கு பலராகத் தெரிந்தாலும் உண்மையில் நாம் அனைவரும் ஒருவரே! எண்ணங்களே ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றது ஆண்டவன் எல்லோரையும் ஒரே விதமான எண்ணத்துடன் படைத்திருந்தால் குழப்பம் என்பதே இருந்திருக்காது அலலவா?

ஒரே ஆன்மாவிற்குள்

ஏன் பலவித குழப்பத்தை கடவுள் கொடுக்கின்றான். இங்கு குழப்பம் என்று ஒன்று இருந்தால்தான் அமைதி என்ற ஒன்றை தேட முடியும்.குழப்பத்தில்தான் மக்கள் அமைதிக்காக துடிப்பார்கள்.

எல்லாம் ஆண்டவன் சித்தம், அவனது சித்தமின்றி இங்கு எதுவும் நிகழ்வதில்லை. எனவே நீங்கள் வாழ்க்கையை வாழ விரும்பினால் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுங்கள். அதை உங்கள் வீட்டிலேயே தொடங்குங்கள். உங்கள் குடும்பத்தை, செல்லப் பிராணியை, செடி கொடிகளை, பண்ட பாத்திரங்களை, உடைகளை நேசியுங்கள். அவையாவும் உங்களைவிட வேறு பட்டவை அல்ல, அவையும் நீங்களும் ஒன்றே! எனவே யார் மீதும் போபம் வந்தால் எதையும் தூக்கி எறியாதீர்கள். மென்மையை கையாளுங்கள். எல்லாவற்றிலும் ஒரே ஆன்மாவைக் காணுங்கள். அன்பு செலுத்துங்கள்.

நீங்கள் எதை எல்லாம் உங்களுக்கு வேற்றுமையாக இருக்கின்றது என்று கருதுகின்றீர்களோ அவைகளில் எல்லாம் ஒற்றுமையைக் காணுங்கள் அதுவே உண்மையான ஆன்மீகம் அனுபவம் ஆகும்.

கடவுளை காண வேண்டுமா?



ஒரு இளைஞன் பகவான் இராமகிருஷ்ணரிடம் சென்று, "ஐயா! நான் இப்பொழுதே கடவுளை காண வேண்டும்" என்றான்.

இராமகிருஷ்ணர், முதலில் குளிப்பதற்கு கங்கைக்கு செல்வோம் என்று அவனை கங்கைக்கு கூட்டிச் சென்று, நீரில் மூழ்கி, குளி என்றார். அவன் நீரினில் மூழ்கியதும், இராமகிருஷ்ணர் அவனை நீரில் இருந்து வெளியில் வராதவாறு நீருக்குள்ளேயே அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

இளைஞன் மூச்சு விடமுடியாமல் திணறினான். அவனால் இனியும் தாக்குபிடிக்க முடியாது என்று தெரிந்தபோது அவனை நீரில் இருந்து மேலே எழுவதற்கு விட்டுவிட்டார்.

இளைஞன் மூச்சு திணற எழுந்து நின்றபோது, இராமகிருஷ்ணர் அவனைப் பார்த்து, " நீ நீருக்குள் இருந்த போது என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்" என்று கேட்டார்.

"மூச்சைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். வேறு நினைப்பே வரவில்லை" என்றான் இளைஞன்.

"அதுபோலவே ஆண்டவனையும் நினைத்தால், அவனை உடனே காண்பாய்" என்றார் இராமகிருஷ்ணர்.

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



LIC
STAR Health Insurance

இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 5. சாயி தியானாலயாவிற்கு பாபா வருகை

ஒருமுறை குரு அவர்கள் அம்பத்தூர் பாபா கோவிலின் குடமுழுக்கிற்கு சென்றிருந்தார். விழா முடிந்ததும் அவரது நண்பர் ஒருவர் தனது வீட்டிற்கு வந்து செல்லும்படி அன்புக் கட்டளை யிட, குருவும் அவர்களது இல்லத்திற்கு சென்றிருக்கின்றார்.

அவர்களது இல்லத்திற்குச் சென்று அவர்களுக்கு ஆசி வழங்கிவிட்டு புறப்படும் சமயத்தில் தான், ஒரு அட்டை பெட்டியில் வைத்து வெளியே தூக்கிப்போடுவதற்கு தயாராக இருந்து பாபா சிலை யைப் பார்த்திருக்கின்றார்.

ஏன் பாபா சிலையை அட்டைப பெட்டியில் வைத்திருக்கின்றீர்கள் என்று நண்பரைக் கேட்க, அவரோ, அந்த பாபா சிலையை நாங்கள் வாங்கி பத்து வருடத்திற்கு மேலாகிவிட்டது. இப்போது அது மிகவும் பழையதைப போன்று ஆகிவிட்டது. மேலும் அங்கங்கே உடைந்திருக்கின்றது.

அது சாதாரண பிளாஸ்டர் ஆப் பாரீசில் செய்யப்பட்டதுதான். அதனால் தான் தூக்கிப்போட்டுவிட்டு வேறு வாங்கிக் கொள்ளலாம் என்று எடுத்து வைத்திருக்கின்றோம். இருந்தாலும் பத்து வருடமாக வழிபட்ட பாபாவை தூக்கி போட மனம் இல்லாமல் என் மனைவிதான் அதை இன்னும் தூக்கி



போடாமல் வைத்திருக்கின்றாள்.என்று கூறியிருக்கின்றார்.

அதற்கு உடனே குரு அவர்கள், அதை ஏன் தூக்கிப்போடுகின்றீர்கள். என்னிடம் தாருங்கள். நான் அதை சரி செய்து வர்ணம் பூசித் தருகின்றேன் என்று கூற, அவர்களும் சரி, செய்து தாருங்கள் என்றுகூற, குரு அவர்கள் அந்த சிலையை எடுத்து வந்து விட்டார்கள்.

அது இரண்டரை அடி உயரம் கொண்ட சிலை. தெருவில் விற்று வருவார்களே அந்த சிலை. கீழே விழுந்தால் நொருங்கிப் போகும். அதை ஐந்து கிலோ சிமெண்ட் வைத்து பூசி உடையாதவாறு சரிசெய்து அழகான

வர்ணம் பூசி தயார் செய்துவிட்டார் குரு. சிறிது நாள் கழித்து, நண்பரும் அவரது மனைவியும் சேர்ந்து பாபா சிலையை வாங்குவதற்கு தியானாலயாவிற்கு வந்தார்கள்.

வந்தவர்கள், சிலையை பார்த்தவுடன் முகம் மாறிப்போனார்கள். என்னவென்று கேட்டதற்கு எங்களுக்கு இந்த பாபா சிலை பிடிக்கவில்லை. நாங்கள் வேறு வாங்கிக்கொள்கின்றோம். இதை யாரிடமாவது கொடுத்து விடுங்கள். என்று கூறிவிட்டார்கள்.(அவர்களுக்கு உடைந்த சிலையை சரி செய்து வழிபட மனம் ஒத்துக் கொள்ளவில்லை).

நம் வீட்டு குழந்தைக் கீழே விழுந்து கை ஒடிந்து விட்டது என்றால் தூக்கியா எறிந்து விடுகின்றோம். வைத்தியம் பார்த்து வைத்துக் கொள்கின்றோம் அல்லவா? அதுபோலத்தான் என்று குரு எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள். அவர்கள் மனம் மாறுவதாக இல்லை.

இதில் என்ன விசேசம் என்றால், அந்த காலகட்டத்தில் எங்களிடம் கை செலவிற்கு என்று 10 ரூபாய் கூட இல்லாத நேரம். இருக்கின்ற காசை எல்லாம் செலவழித்து பாபா சிலையை தயார் செய்து விட்டார் குரு. நண்பர் பாபா சிலையை எடுத்துக் கொண்டால் குருவிற்கு கொஞ்சம் பணம் கிடைக்கும். அதை வைத்து ஒரு சில நாட்களை கடத்தலாம் என்று குருவும் நானும் திட்டமிட்டிருந்தோம்.

ஆனால் பாபாவின் திட்டமோ வேறு மாதிரி இருந்தது. நண்பரும் அவரது மனைவியும் சற்று நேரம் பாபா சிலையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். பிறகு என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. இருவரும் சேர்ந்து பாபா சிலையைத் தூக்கி குருவிடம் தந்து இதை நாங்கள் உங்களுக்கு பரிசாக அளிக்கின்றோம். இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்துவிட்டார்கள்.

குருவிற்கு ஒருபுறம் சந்தோசமாக இருந்தாலும், மறுபுறம் செலவழித்த பணம் கூட வரவில்லையே! என்ற நினைப்போடு கண்களில் கண்ணீர்மல்க, என்னைப் பார்த்துவிட்டு பாபா சிலையை நெஞ்சோடு அனைத்துப் பிடித்த வண்ணம் சற்று நேரம் அப்படியே நின்றிருந்தார்.

அப்போது அங்கு வந்த தச்சு வேலை செய்யும் பக்தர் ஒருவர், குருவின் கையில் இருந்த பாபாவைப் பார்த்துவிட்டு, அடடே சென்டருக்கு புது பாபா வந்திருக்கின்றாரா, அழகாக இருக்கின்றாரே, வைப்பதற்கு இட மில்லை என்றா கைகளில் வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

இப்போதைக்கு எங்காவது வைத்துக் கொள்ளுங்கள். இன்னும் இரண்டே நாளில் பாபாவிற்கு புதிய டேபிள் ஒன்றை தயாரித்து தருகின்றேன். என்றார்.

அவர் சொன்னதுபோலவே பாபா விற்கென புதிய மேஜை ஒன்றை தயாரித்து வழங்கினார். தவிரவும் பாபா அமர தேக்கு மரத்தாலான ஆசனம் ஒன்றையும் செய்து கொடுத்தார்.

எந்த பாபா சிலையை பிடிக்க வில்லை என்று குருவிடமே திருப்பிக் கொடுத்தார்களோ, அந்த பாபாவே சாய் தியானாலயாவை ஆள ஆரம்பித்தார். பக்தர்களால் மாலை, மரியாதை, ஆரத்தி என்று அனைத்தும் அந்த பாபாவிற்கே செய்யப்பட்டன. இன்றும் அவருக்கே

செய்யப்படுகின்றன.

இதில் முக்கியமான விவேசம் என்ன வென்றால் அன்று நமது குருவின் பிறந்தநாள். அன்றும், இன்றும், குரு பிறந்தநாளை கொண்டாடுவதில்லை. வாழ்த்துக்களை மட்டும் ஏற்றுக் கொள்வார். ஆகவே அன்று யாருக்கும் அவரது பிறந்த நாள் என்று தெரியாது. அவர் செய்த பாபா அவருக்கே அவரது பிறந்த நாளில் பரிசாக கிடைத்தது பாபாவின் லீலையன்றி வேறென்ன?

சாய் தியானாலயாவில், ஏற்கனவே குருநாதரால் சிம்மாசனத்துடன் கூடிய ஒரு பாபா செய்யப்பட்டு வழி பாட்டில் இருந்து வந்தது. அந்த பாபாவுடன், புதிதாக வந்த பாபாவும் சேர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க ஆரம்பித்தனர்.

ஒருநாள் சுவாமிமலை சீரடி சாய்பாபா திருக்கோவிலின் நிர்வாகி திரு. வீராச்சாமி அவர்கள் நமது குருவுடன் பேசி கொண்டிருக்கும் போது எதார்த்தமாக உங்கள் சாய் தியானாலயாவில் துவாரகாமாயி பாபா இருக்கின்றாரா என்று கேட்க, குரு இல்லை என்று கூறிவிட்டு அதை அத்துடன் மறந்து விட்டிருக்கின்றார்.

அடுத்தவாரம் கோவையைச் சேர்ந்த திரு. கார்த்திகேயன் சீரடி சென்றவர் குரு காணிக்கையாக ஒரு அழகிய துவாரகாமாயி பாபாவை வாங்கி வந்து சாய் தியானாலயாவிற்கு அளித்தார்.

அவருடன் சேர்ந்து இப்போது மூன்று பாபாக்களும் மும்மூர்த்திகளாக பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்கள்.

லீலை: 6. குருவை சிலை செய்ய வைத்தது

நமது குரு அவர்கள் தனது 15 வயதிலேயே அருட்பெரும்சோதி ஆண்டவர் வள்ளல் பெருமானார் அவர்களின் குருபரம்பரையில் வந்த சீடர்களுடன் ஏற்பட்ட பழக்கத்தினால், சோதிவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர். தொடர்ந்து "அத்வைத" வழியில் ஆன்மீக பயிற்சியில் ஈடு பட்டதால் சிலை வழிபாடு அவரிடம் இல்லாதிருந்தது.

இப்போதுகூட பகவான் பாபாவின் சிலையை தவிர வேறு சிலைகளின் மீது ஆர்வம் காட்டமாட்டார். அவர் எப்படி பாபாவின் சிலையால் ஈர்க்கப்பட்டார். எங்கள் வீட்டிற்கு பாபா முதல் முதலில் எப்படி வந்தார் என்பதை கூறுகின்றேன். அப்போது அவர் என் கணவர். ஆகையால் இந்த கதையில் மட்டும் உரிமையோடு குருவை கணவர் என்று அழைத்துக் கொள்கின்றேன்.

2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஓர் நாள் அதிகாலை எனக்கு ஓர் கனவு வந்தது. அதில் நானும் என் கணவரும் ஓர் அடர்ந்த காட்டிற்குள் செல்கின்றோம். அங்கே ஒரு வேப்ப மரத்தின் அடியில் தலையை துணியால் மூடியபடி, நீள அங்கி அணிந்த வயதான பெரியவர் ஒருவர் கால்மேல் கால் போட்டபடி ஒரு கல்லில் அமர்ந்திருக்க, நாங்கள் அவரை விழுந்து வணங்க, அவர் எங்களை ஆசீர்வதிக்கின்றார்.

அத்துடன் கனவு முடிந்து விட்டது. ஆனால் அவரின் முகத்தை என்னால் மறக்க முடியவில்லை.கருணையான அந்த முகம் எப்போதும் என் மனக்கண் முன்னே ஒளிப்பிழம்பாய் நிழலாடிக் கொண்டே இருந்தது.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாய் என் கணவரிடம் என்

கனவை விவரிக்கத் தொடங்கினேன். என் கணவரோ, கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார். இருப்பினும் நான் சங்கடப்படக்கூடாது என்பதற்காக கேட்டார்.

கனவில் வந்த பெரியவர் பற்றி நான் கூறிய உருவ ஒற்றுமை வட மாநிலத்தில் மகான் சாயிபாபாவை ஒத்திருப்பதாகவும், ஆனால் அவரைப்பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும் கூறிவிட்டார். நானும் அதை அப்படியே விட்டு விட்டேன்.




ஒரு வாரம் சென்று எனது கணவரின் நண்பர் திரு.பாண்டியன் என்பவர் தான் அவசரமாக ஊருக்குச் செல்வதால், நூலகத்தில் எடுத்த புத்தகத்தை மாற்றி வைக்க முடியாததால், நீங்கள் போகும் போது மாற்றி வையுங்கள் என்று ஒரு புத்தகத்தை கவரில் போட்டு என் கணவரிடம் கொடுத்து விட்டுச் சென்றார். வெளியில் சென்ற என் கணவர் அதை மறந்து விட்டு சென்று விட்டார்.

வீட்டில் இருந்த நான், பொழுது போகாததால் அது என்ன புத்தகமாக இருக்கும் என்ற ஆவலில் கவரைப் பிரித்துப் பார்த்த நான் வியப்பின் உச்சிக்கே சென்று விட்டேன். காரணம் நான் கனவில் கண்ட அதே கருணாமூர்த்தியின் உருவத்தை புத்தகத்தின் அட்டையில் பதிப்பித்து சீரடி சாயிபாபா வரலாறு என்றிருந்தது. முதன்முதலாக பாபாவின் உருவத்தை அப்போது தான் நான் பார்க்கின்றேன்.

நான் முன்பின் பார்த்திராத ஒரு மகான் என் கனவில் வந்ததும், பிறகு புத்தக வடிவில் எங்கள் இல்லம் தேடி வந்து காட்சி தந்ததும், என்னால் நம்ப முடியவில்லை. வெகுநேரம் பாபாவையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அன்றைய காலகட்டத்தில் கடுமையான வாழ்க்கை போராட்டத்தில் போராடிக்கொண்டிருந்த நாங்கள் பெரிதும் நம்பியிருந்த மனிதர்களும், தெய்வங்களும் எங்களை கைவிட்ட



நேரத்தில் யார் என்றே தெரியாத பாபா எங்களுக்கு கலங்காதே! நான் இருக்கின்றேன் என்ற செய்தி அனுப்பியது இப்படித்தான்.

அடுத்து நேரில் வந்தது எப்படி என்று பாருங்கள்.

நாங்கள் குடியிருந்த வீட்டின் எதிரில் ஓர் திருமண மண்டபம் இருந்தது. திருமணம் இல்லாத நாட்களில் எங்கள் தெருவில் இருக்கும் குழந்தைகள் அனைவரும் அங்கேதான் விளையாடுவார்கள். எங்களது முதல் குழந்தை அமிர்தாவிற்கு அப்போது ஒரு வயது. திருமண மண்டபத்து காவல்கார தாத்தா குழந்தைகளோடு அன்பாக விளையாடுவார்.

சமீபத்தில்தான் மண்டபத்தில் புட்டபர்த்தி பாபாவின் பிறந்த நாள் நிகழ்ச்சி மிக கோலாகலமாக நடந்து முடிந்தது. மண்டபத்தை காலி செய்து போகும் போது சேவகர்கள் சில பிரசாதப் பைகளை அங்கேயே விட்டுச் சென்றிருக்கின்றனர்.

குழந்தைகள் விளையாடி முடித்து வீடு திரும்பும் போது, காவல்காரத் தாத்தா பிரசாதப் பைகளை ஆளுக்கு ஒன்றாக கொடுத்து அனுப்பியிருக்கின்றார். எங்கள் குழந்தை அமிர்தா பிரசாத பையை தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு வந்து என்னிடம் தாத்தா தாத்தா என்றாள்.

நான் பையை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். அதில் ஒரு லட்டும், புட்டபர்த்தி பாபாவின் புத்தகம் ஒன்றும், சிறிய மெழுகுவர்த்தி பெட்டி ஒன்றும் இருந்தது. பிரசாத லட்டை நானும், குழந்தையும் சாப்பிட்டுவிட்டு, மெழுகுவர்த்திப் பெட்டியை அலமாரியில் வைத்து விட்டேன்.

ஒரு வாரம் சென்றது. அன்று கார்த்திகை தீபம். என் கணவருக்கு கார்த்திகை தீபம் ஏற்றி வழிபடுவது

என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால் அன்றைய நிலைமையில் தீபம் ஏற்றுவதற்குக்கூட எங்களிடம் பணம் இல்லையே என்று வருந்தியவளாய் என் கணவரின் வருகைக்காக காத்திருந்தேன். கணவரோ வாடிய முகத்துடன் வீடு திரும்பினார்.

மண் விளக்கும், எண்ணையும் கூட வாங்க முடியவில்லையே, என்று எங்களின் வறுமை நிலையை மனதிற்குள் நொந்து கொண்ட போது தான் போன வாரம் எங்கள் மகள் எடுத்துவந்த மெழுகுவர்த்திப் பெட்டி என் ஞாபகத்திற்கு வந்தது. அதை எடுத்து வந்து என் கணவரிடம் கொடுத்து, இந்த மெழுகுவர்த்தியை ஏற்றி வையுங்கள் என்றேன்.

பெட்டியை வாங்கிப் பிரித்துப் பார்த்த என் கணவரின் முகம் மேலும் வாடியது. என்னங்க என்பது போல் அவரைப் பார்த்தேன். அட இது மெழுகுவர்த்தி இல்லப்பா...ஏதோ ஒரு பொம்மை இருக்கு என்று வெளியே எடுத்து அதை பார்க்காமலே என் கையில் திணித்து விட்டார்.

என் கணவர் சிலைவணக்கம் செய்யும் வழக்கமில்லாதவர் என்று கூறினேன் அல்லவா? அவருக்கு எல்லாமே அருட்பெரும்சோதி, தனிப்பெரும் கருணைதான்.

நான் என் கைகளில் இருக்கும் சிலையைப் பார்த்தேன். எங்கள் வறுமை, துக்கம் எல்லாம் எங்களை விட்டு ஓடியது போல் இருந்தது. உற்சாக மிகுதியால், என்னங்க என்று கூச்சலிட்டேன். என் கணவர் என்னவோ ஏதோவென்று ஓடிவந்தார்.

அவரிடம் நான் பாபாவின் சிலையைக் காட்டி, இதோ பாருங்கள், கனவில் வந்து, பிறகு புத்தகத்தில் வந்து இப்போது சிலை வடிவில் நேரிலேயே வந்து விட்டார். என்று ஆனந்தக் கூத்தாடினேன்.

அந்த வருடம் கார்த்திகை தீபத்தன்று எங்களது வீட்டில் ஒரு விளக்குகூட ஏற்றவில்லை. ஆனால் எங்கள் வீடும், மனமும் பிரகாசமாக இருந்தது.

காரணம் எங்களை உய்விக்க, பகவான் சாயிபாபா எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார். "சூரியனின் சாம்ராஜ்யத்திலே அகல் விளக்கு எதற்கு" என்ற சத்சரித வரிகளே இப்போது எனக்கு ஞாபகம் வருகின்றது.

ஆனால் என் கணவருக்கோ ஓர் சந்தேகம். இது பாபாவை விளம்பரப்படுத்தும் உத்தி என்று என்னிடம் வாதிட்டார். உடனே நான் பிரசாதப் பை வாங்கிய மற்ற குழந்தைகளின் வீட்டிற்கே சென்று பார்த்ததில் அனைத்திலும் மெழுகு வர்த்திகளே இருந்தன.

அப்படியே சீரடி பாபாவை விளம்பரப்படுத்தும் உத்தி என்றாலும் அதை ஏன் புட்டபர்த்தி பாபாவின் பிரசாதப் பையில் வைத்துக் கொடுக்க வேண்டும். அதற்குப்பதில் சத்ய சாய்பாபாவின் சிலையை அல்லவா வைப்பார்கள் என்றேன். என் கணவரும் யோசிக்க ஆரம்பித்தார்.

அப்படி யோசிக்க ஆரம்பித்தவர் பாபாவின் உருவத்தில் ஆழ்ந்துபோனது எப்படி, அவரின் சிலைகளை செய்தது எப்படி என்பதை அடுத்த மாதம் எழுதுகிறேன்.

– லீலைகள் தொடரும்...

தொடர் –45

குருவைத் தேடி

வெளித் தோற்றத்தை நிஜம் என்று நம்பி ஏமாந்தால் மட்டுமே மாயை மனிதனை அலைக்கழிக்கும். அதன் பின் உள்ள உண்மையைப் புரிந்து கொள்ளும் ஞானம் பெற்று விட்டால் அதனால் அலைக்கழிக்கப்படாமல் மனிதன் பரிபூரணமாக வாழ்ந்து இறைவனை அடைவான்.

அந்தோணியின் கூற்றை மெய்ப்பிப் பதுபோல் மாயை என்னிடம் விளை யாட ஆரம்பித்தது. ஆம் நாதன் வடிவில்.

நாதனுக்கு பணம் சம்பாதிப்பது மட்டுமே பிரதானமாக இருந்தது. தான் புதிதாக ஆரம் பிக்கப்போகும் தொழிலில் என்னை கூட்டாளியாக்கப் போவதாகக் கூறினார். நான் மசிய வில்லை. ஒரு கட்டத்தில் நான் வேறு நபர்களுடன் பழகக்கூடாது என்று வெளிப்படையாக கூற ஆரம்பித்தார்.

இந்த ஊரும், மனிதர்களும் உங் களுக்குப் புரியாது. இங்கி ருப்பவர்கள் அனைவரும் மோச மானவர்கள். உங்களை பயன்ப டுத்திக்கொண்டு தூக்கி எறிந்து விடுவார்கள் என்று மூளைச் சலவை செய்ய ஆரம்பித்தார். நாதன் ஒரு வித்தியாசமான மனநிலை உடையவர் தனக்கு என்று எதையாவது மனதில் வரிந்து கொண்டால் அதை வேறு யாருக்கும் விட்டுத்தர மாட்டார். அதை தன்னிடமே வைத்துக் கொள்ள எதை வேண்டுமானாலும் செய்வார். அது எதுவாக இருந்தாலும் சரி.

என்ன செய்வது, மாயையை அதன்போக்கில் விட்டு அதை அனுபவித்தால் மட்டுமே அது நம்மை விட்டுப் போகும். இல்லை என்றால் அதை அனுபவிப்பதற்காக மீண்டும், மீண்டும் பிறக்க வேண்டிவரும். நான் அனுபவிக்க தயாரானேன்.

நாதன் சொல்வதை எல்லாம் கேட் பதைப் போன்று நடிக்க ஆரம்பித்தேன். நாதனுடன் பல இடங்களுக்கு தொழில் நிமித்தமாக சுற்றி வந்தேன். நாதன் மெதுவாக எனக்கு தீய போதனைகளை போதிக்க ஆரம்பித்தார். பணம் மட்டுமே இந்த உலகத்தில் உண்மை. உங்களுடைய அறிவும், என்னுடைய உழைப்பும் சேர்ந்தால் கோடிக்கணக்கில் நாம் சம்பாதிக்க முடியும்.

திருமணம் செய்து கொண்டால்



பணம் சம்பாதிக்க முடியாது. எனவே நிறைய பணம் சம்பாதித்து நாம் இஷ்டம் போல வாழலாம். திருமணம் பற்றிய எண்ணமே நமக்கு வரக்கூடாது. நான் உங்களுக்கு கடைசிவரை உண்மையாக இருப்பேன். நீங்களும் எனக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் மனமுருக பேசி என்னை மாற்ற முயற்சித்தார்.

நான் மிகவும் விழிப்புணர்வோடு எனக்கான நேரத்திற்காக காத்திருந்தேன். நேரமும் வந்தது. இயற்கை எனக்காக ஏற்பாடு செய்திருந்த என் இல்லறத் துணையை எனக்கு அடையாளம் காட்டியது. அவர்கள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் என்னிடம் தவம் கற்றுக் கொள்வதாய் உறுதி ஏற்றபின் நானும் ஒத்துக் கொண்டேன்.

காலப்போக்கில் நான் விரும்பும், எளிமையும், எதற்கும் பெரிதாக ஆசைப்படாத குணமும், முக்கியமாக என்னைப்போலவே தங்கத்தின் மீது சுத்தமாக ஆசையில்லாதவராகவும் இருந்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

காலம் உருண்டோடியது. நாங்கள் திருமணம் செய்து கொள்ளும் நாளும் வந்தது. எங்களது திருமண செய்தியை மறைவாக வைத்திருந்து, திடீரென திருமணத் தேதியை அறிவித்ததும். நாதனுக்கு மட்டுமல்ல, எனது உறவுகளில் பலருக்கும் அதிர்ச்சி எங்களது திருமணத்தை தாலி கட்டும் கடைசி நிமிடத்திலாவது நிறுத்திவிட முடியுமா என்று துடித்தனர். அதற்காக எல்லா வழிகளிலும் முயற்சித்தனர்.

என்னைச்சுற்றி என் நண்பர்களுடன் எனது முன் சென்ம தொடர்பான நண்பர்களும் கலந்து கொண்டு எனது திருமணத்திற்குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நடத்தி முடித்தனர். எனக்கு இல்லற தர்மத்தை போதித்த அருட்தந்தை திரு. வேதாத்திரி மகரிஷி அவர்களின் அருளாசியுடன், பல அருளாளர்கள், பெரியோர்களின் முன்னிலையில், திருமணம் தமிழ் சித்தர்களின் மரபுப்படி, வரதட்சணை, மொய்பணம், வாங்காமல் சிறப்பாக நடந்தேறியது.

என் திருமணத்திற்காக பல சிரமங்களை மேற்கொண்ட இந்த சென்மத்து நண்பர்களான, திரு.முத்துக்கிருஷ்ணன், திரு. பாண்டிய ராஜன், திரு. ஆறுமுகம் திரு.சிவகுருநாதன், திரு.சிவராமன், ஆகியோருக்கும், என்னுடன் தொடர்ந்து வருகின்ற முன் சென்மத்து நண்பர்கள் அருட்திரு. நாகராஜா, அருட்திரு.கஞ்சா சாமியார், அருட்திரு. பெரியகருப்பு, அருட்திரு. மூக்கையன் சுவாமி, அருட்திரு. ஊமைச்சாமி ஆகியோருக்கும் நான் எப்போதும் நன்றி கூறியதில்லை. இதன் மூலம் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது திருமண நிகழ்வின்போது நடைபெற்ற சம்பவங்களை முழுமையாக சொல்லாமல் சுருக்கமாக முடித்ததற்கு காரணம், அப்போது என்னப்பற்றி முழுமையாக அறியாமல் என்னை எதிர்த்தவர்கள், இப்போது என்னுடன் நட்புடன் இருக்கின்றார்கள். அப்போது என்னை புரிந்து கொண்டது போல் நடித்து, என்னுடன் நட்பாக இருந்தவர்கள் இன்று எனக்கு எதிராக இருக்கின்றார்கள். எனவே அவர்களின் மனம் எந்த வகையிலும் புண்படக்கூடாது என்பதற்காகத்தான்.

ஆகவே நாம் திருமணத்திற்கு பின்பாக குருவைத்தேடிய கதைக்கு வருவோம்.

திருமணம் முடிந்த முதல்மாதம் பழமுதிர்ச்சோலைக்கு தம்பதிகளாய்

வந்து ராமத்தேவரை சந்திக்கவும் என்ற தகவலின்படி, நான் என் மனைவியுடன் எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் அழகர் கோவிலுக்குச் சென்றோம்.

அது ஒரு சித்திரை மாதம். அழகர் ஆற்றில் இறங்கும் சித்திரைத் திரு விழா நேரம். எங்குபார்த்தாலும் மனிதத் தலைகள். உட்கார இடம் கிடைக்காதபடி மக்கள் கூட்டம்.மலையும் மலை சார்ந்த இடங்களில் உள்ள சமவெளிப்பகுதிகளை பண் படுத்தி விவசாயம் செய்து உணவிற்கு தேவையான நெற்கதிர்களை அறுவடை செய்ய

மக்களுக்கு கற்றுத்தந்த

"கதிர்வேலன்" முருகனின் அறுபடை வீடுகளில், ஆறாவது படை வீடானது பழமுதிர்சோலை. தற்போது இது மலைமேல் உள்ளது.

ஆதிதமிழனின் மாயோன் வழிபாட்டின் வழித்தோன்றலான மகான் கண்ணபெருமானுக்கென கட்டப்பட்ட ஆதி ஆலயம் கீழே உள்ளது. இன்றும் இப்பகுதி மக்கள் தங்களது வயலில் விளையும் நெல்லின் ஒரு பகுதியை இக்கோவிலுக்கு காணிக்கையாக கொண்டு வந்து கொடுக்கும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

கீழே இருந்த ஆதி பழமுதிர்சோலை என்னும் சோலைமலை, பிற்காலத்தில் கள்ளழகர் ஆலயமாக மருவி வழிபடலாயிற்று. ஆலயத்தின் நுழைவு வாயிலில் "காவல்கார கருப்பு" பதினெட்டாம் படி கருப்பண்ண சாமியின் அரூப வழிபாடு நடக்கும் ஆலயம் தென்படும்.

இன்றும் சுற்றுவட்டாரப்பகுதியில் நீதிமன்றத்திற்குச் சென்றும் தீர்த்து முடிக்கப்படாத வழக்குகள், கருப் பண்ணசாமியின் சன்னதியில் ஒரு சில விநாடிகளில் முடித்துக் கொள் ளப்படுகின்றன.

ஆலயத்தின் உட்புறம் பெருமாள் சன்னதியின் பின்புறம் ரோம்தேவர் என்ற இராமத்தேவரின் சமாதிபீடத்தில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்தோம்.

அகத்தியம் பெருமானின் ஆணைக் கேற்ப தன்னுடைய இளமைப்பருவத்தின் வெகு வருடங்களை, தமிழகத்தில் அறுபடை வீடுகளில் தங்கி தவம் இயற் றிய இயேசுநாதர் தன் பிறந்த பூமிக்கு திரும்பியதும் தமிழக சித்தர்களின் பெருமைகளை தன் சீடர்களுக்கு விளக்கி கூற, அதை உணர்ந்து கொண்டு ரோம் தேசத்தில் இருந்து தமிழகம் வந்து சோலைமலையில் தங்கி தவமியற்றி அங்கேயே தன் பூத உடலை சமாதியாக்கிய ரோம் தேவர் காலத்தின் கோலத்தால், யோக நரசிம்மர் என்ற பெயர் தாங்கி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

தியானம் முடித்து நாங்கள் எழுந்து கொண்ட சமயம் ரோம் தேவர் பெரியவர் வடிவில் எங்களுக்கு பிரசாதம் கொடுத்து வாழ்த்தினார். என் மனைவி பெரியவரைப்பார்த்து அவராக வந்து பிரசாதம் தந்து விட்டு போகின்றாரே யார் அவர் என்று நச்சரித்தார். யாராக இருந்தால் என்ன? பெரியவர் அல்லவா, அவரிடம் ஆசி பெற்றுக் கொள்வோம் என்று

அவரிடம் ஆசி பெற்றுக் கொண்டு வீடு திரும்ப பேரூந்து நிறுத்தத்திற்கு வந்தோம்.

தென் மாவட்ட பேரூந்தில் மனி தர்கள் எப்படி ஏறிப்போவார்கள் என்பதை நீங்கள் திரைப்படங்களில் பார்த்திருக்கலாம். கூட்டத்தில் என் மனைவியை இழுத்துக்கொண்டு நானும் எவ்வளவோ முயற்சிக்கின்றேன். பேரூந்தில் எங்களால் ஏற முடியவில்லை.

நின்று நின்று கால்கள் வலித்ததால் என் மனைவி மிகவும் சோர்ந்து



போனார்கள். இரவாகிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாத சூழலில் ஒரு பேரூந்தில் இருந்து அந்தோணி என்னை நோக்கி கையசைத்தவாறே அமர்ந்திருக்கின்றார்.

அந்தோணி ஏற்கனவே பேரூந்தில் ஏறி இருக்கை போட்டிருக்கின்றார். மிகவும் கஷ்டப்பட்டு பேரூந்தில் ஏறி இருக்கையில் அமர்ந்தோம். பேரூந்து புறப்பட்டது. அந்தோணி என்ற கஞ் சா சாமியாரும் எனக்கு கையசைத்து என்னிடம் பிரியாவிடை பெற்றார். அவர் யார் என்று என்னிடம் என் மனைவி கேட்டதற்கு யாரோ, யாருக்குத் தெரியும். என்று பதில் கூறினேன். இருபது வருடங்கள் கழித்து இதன் மூலம் அவர் யார் என்று என் மனைவி அறிந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

இந்த நிகழ்விற்கு பின் நிக்கோலஸ் என்ற அந்தோணி ஏசுபிரானை சந்தித்து அவரின் ஆசியுடன் செருசேலத்திலேயே தங்கி விட்டதாக சமீபத்தில் எனக்கு தகவல் அனுப்பியிருந்தார். அதைப் பற்றி பின்னர் விவரிக்கின்றேன்.

திருமண பந்தத்தில் இருக்கும் நன்மை தீமைகளையும் நான் அறிய வேண்டும் என்பதற்காக என் குரு நாதர்களின் ஏற்பாட்டின்படி திரு மணம் நடந்து முடிந்தது. நானும் இல் லறத்தானாகி இன்ப, துன்பங்களை அனுபவிக்கலானேன்.

நண்பர்களும், உறவினர்களும் என்னை விட்டு சற்றே விலகினர் பொரு ளாதாரம் எங்கள் வாழ்வை நசுக்கிப் பார்த்தது. ஆன்மீகம் எனக்குள் சற்றே அமைதியை தந்தாலும் என்னை நம்பி வந்தவளுக்குத் தேவையானதை செய்ய வேண்டுமே? நாங்கள் இருவருமே

தியான மார்க்கத்தில் இருந்ததனால் முடிந்தவரை சமாளித்தோம்.

நாங்கள் வாழ்ந்து வந்த சிறிய கிராமத்தில் எங்களுக்கு தகுந்த வியாபாரமோ, வேலையோ அமைய வில்லை. பிழைப்பதற்காக வேறு இடம் போகலாம் என்று யோசித்து கும்பகோணத்திற்கு போகலாம் என்று தீர்மானித்தோம்.

அப்போதுதான் ஒருநாள் அதிகாலை என் மனைவி மதிய உணவிற்கு ஓர் டம்ளர் அரிசி மட்டும் தான் இருக்கின்றது. வேறு எந்தப் பொருட்களும் இல்லை. மதிய உணவிற்கு என்ன செய்வது. என்றார்கள்.

சாதம் மட்டும் ஆக்கிவை. மற் றதை மதியம் பார்ப்போம் என்று கூறிவிட்டு கடைக்கு வந்து ஏதாவது வியாபாரம் வராதா என்று காத்தி ருந்தேன். அன்று பார்த்து ஒரு வியா பாரமும் இல்லை மணியோ பகல் இரண்டாயிற்று. கல்லாபெட்டியில் இருந்த எட்டணாவிற்கு ஊறுகாய் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு புறப்பட்டேன்.

எதிர்திசையில் கண்கள் இல்லாத ஓர் இளைஞன் குச்சியை ஊன்றியபடி அய்யா கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள், என்றவாறே வந்தார். நான் அவருக்கு தண்ணீர் கொடுப்பதற்காக மீண்டும் கடையைத் திறந்து தண்ணீர் கொடுத்தேன். அவர் மீண்டும் மீண்டும் தண்ணீர் கேட்டு குடித்ததைப் பார்த்து, அவ்வளவு தாகமா? என்றேன்.

இல்லீங்க அவ்வளவு பசி என் றார். எனக்கு என்னவோ போலிருந்தது. ரொம்ப நன்றிங்க என்றவர் தன் பாக் கெட்டில் கையை விட்டு இரண்டு எழும் பிச்சை பழங்களை எடுத்து என்னிடம் நீட்டினார். எதுக்கு என்றேன். நீங்க செ ஞ்ச உதவிக்கு என்னால் முடிந்த உதவி.

எனக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. எழும்பிச்சை பழங்களை வாங்கிக்கொண்டு, நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருங்கள். நான் உங்களுக்கு உணவு எடுத்து வருகின்றேன். என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றேன். வீட்டில் நான் கூறியதைப் போன்று சாதம் மட்டும் ஆக்கிவைத்துவிட்டு என் மனைவி காத்திருந்தாள்.

அவர்களிடம் பழங்களை கொடுத்து எழும்பிச்சை சாதம் செய்து கொடு என்று கேட்க, அவர்களும் சிறிது நேரத்தில் செய்து தர நான் என் னுடைய சாப்பாட்டை தட்டில் போட் டுக்கொண்டு வந்து கண் பார்வையற்ற இளைஞருக்கு சாப்பிடக் கொடுத்தேன்.

அவர் ஒரு வாய் அள்ளி சாப்பிட்ட வர் லெமன் ரைஸா சார் என்றார். ஆமா என்றேன் நான். உடனே அவர் அப் படினா உங்க பேர் ஸ்ரீராமா என்றார். நான் ஆமாம் என்றவாறே அவரைப்பார்த்தேன்.

காலையில் குட்லாடம்பட்டி கோவி லிலே ஒரு சாமியார் இந்த எழும்பிச்சை பழங்களை கொடுத்து இன்னிக்கு உனக்கு யார் உதவி செய்யரவங்களோ அவங்களுக்கு இதக் கொடுன்னு சொன்னார். வேறு என்ன சொன்னார் என்றேன் நான்.

உனக்கு யார் இன்னிக்கு எழும் பிச்சை சாதம் போறாங்களோ அவங்கபேர் ஸ்ரீராமான்னு கேட்டுட்டு அவங்ககிட்ட கும்பகோணத்துக்கு இன்னும் ஒரு வருடம் கழித்து போகலாம்னு சொல்லச் சொன்னார்.

நான் புரிந்து கொண்டேன். அவரை அனுப்பிவிட்டு வீட்டை நோக்கி நடந்தேன் இன்னும ஒரு வருடகாலம் இதே ஊரில் தான் நாம் காலம் தள்ள வேண்டும்.

வேறுவழி வந்த வேலையை முடிக்க வேண்டும் என்றால் தந்த வேலையை கவனமாய் முடிக்க வேண்டுமே!

- (தொடரும்...)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –9

சாய் சரவணன்

"அதி தேவதை"

நம் சுந்தராபாயின் சற்குருவை தேடும் பயணத்தில் நெவாஸே எனும் கிராமத்தில் புராண ஸ்தலமாகிய மோகினிராஜன் ஸ்தலமும், ஞானத்தேவர் மக்களை உய்விக்க ஞானேஸ்வரி எனும் நூலை உருவாக்கிய ஸ்தலத் தில் சுந்தராபாயிக்கு ஏற்பட்ட அனுபவங் களைக் கண்டோம். மேலும் ஒரு சாது வின் வாயிலாக பைடன் ஏகநாதரின் சமாதியை தரிசிக்க வழிகாட்டுதலை பெற்று அதையே பகவத் ஆணையாகக் கருதி பைடனை நோக்கிச் செல்வதாய் கண்டோம்.

இதைப் படிப்போரின் பக்தி மற்றும் சிரத்தையின் பொருட்டு இதுபோல் எல்லாம் நடந்திருக்குமா? இது உண்மையா என்ற கேள்வி வந்ததென்றால், இது சுந்தராபாயிக்கு மட்டும் நடந்த அனுபவம் அன்று. பகவானையே சதாசர்வ காலமும் நினைத்து வாழும் அந்த பக்தர்களின் வாழ்வின் சரித்திரத்தைப் படித்தால் மட்டுமே நமக்கு தெளிவு பிறக்கும்.

சாயிநாதரின் வரலாற்றில் இல்லாத பக்தர்களின் அனுபவங்களா, நானா சாகேப்பின் மகளது பிரச்சனைக்கு முடிவு கட்ட பாபா எத்தகைய லீலை புரிந்தார் என்றால் சுந்தராபாயிக்கு ஏற்பட்ட அனுபவம் சத்யமானதே ஆகும்.

ஆகவே சந்தேகம் எதுவுமின்றி அன்னை சுந்தராபாயிக்கு நிகழும் தெய்வ அனுபவங்கள் நம் வாழ்விலும் நடந்திட முயற்சி செய்தால் நமக்கும் அத்தகைய அனுபவங்கள் நடக்கும். இப்படிப்பட்ட



பக்தி சுந்தராபாயிக்கு எப்படி வந்தது?. பகவானே அவளது தேடுதலுக்கு உதவி புரிகின்றான் என்றால் அவள் சென்ம சென்மமாய் செய்த பிரேம பக்தியின் பலனே ஆகும்.

தன் புண்ய யாத்திரையில் பகவானே தனக்கு அன்னமிட்ட இந்த நிகழ்வு, சுந்தராபாயிக்கு நம்பிக்கையையும், ஆத்ம பலத்தையும் தந்தது. அதே ஆத்மபலத்தோடு பகவானே தன் சற்குருவை காட்டுவான் என்ற நம்பிக் கையோடு, பைடனை அடைந்தாள்.

அவளுக்கு ஏற்கனவே ஏக்நாத்தின் பெருமையும் அவரது குருபக்தியையும் நன்கு அறிந்தவளே, அப்படிப்பட்ட மகான் வாழ்ந்த மண்ணிற்கு வந்தாலும், என்ன செய்வது, எங்கு செல்வது என்று திகைத்து நின்றாள். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். ஞானத்தேவர் எருமை மாட்டினை வேதம் சொல்ல வைத்த

இடமான மாதுகாட் என்ற இடம் எங்கே உள்ளது என வழியறியாது நின்றாள்.

அப்போது வயதான சாது ஒருவர் சுந்தராபாயிடம் வந்து, மகளே, எனக்கு வயதாகிவிட்டதால் கண்கள் சரியாகத் தெரியவில்லை. என் இருப்பிடத்தின் முகவரி கூறுகின்றேன். என்னை அங்கே அழைத்துச் சென்று எனக்கு உதவி செய்வாயா? என்று கேட்க, சுந்தராபாயோ, இப்புண்ணிய தலத்தில் சாது ஒருவருக்கு சேவை செய்யும் பாக்கியத்தை பகவான எனக்கு அருளினானே என்று நினைத்துக் கொண்டு, வயதானவர் கூறிய இடத்தை தேடி அறிந்து கொண்டு அவரைக் கூட்டிச் சென்றாள்.

இடமும் வந்தது. உடனே வய தானவர் அவளிடம், மகளே உனக்கு இந்த இடத்தைப் பற்றி தெரியுமா? என்று கேட்டார். அய்யா நான் இவ்வூருக்கே இப்போதுதான் முதன் முதலாக வந்திருக்கின்றேன். என்று கூறினாள்

உடனே அந்த சாது, மகளே! அதோ எதிரே தெரிகிறதே அது தான் மாதுகாட். ஞானத்தேவர் பண்டிதர்களின் சபையின் முன்னாள் ஓர் எருமை மாட்டை வேதம் சொல்ல வைத்த இடம். நீ போய் அங்கு தரிசனம் செய்து விட்டுவா எனக் கூறினார்.

எவ்விடத்தை நான் காணவேண்டும் என்று தவித்தேனோ, அதை இந்த சாதுவின் மூலம் நிறைவேற்றிவைத்த பகவானின் கருணையே கருணை. என மனதால் வணங்கிவிட்டு, அப்புனித இடத்தை மனமார தரிசித்துவிட்டு மீண்டும் அந்த சாதுவிடம் வந்தாள்.

சுந்தராபாயி அந்த சாதுவிடம், ஏக்நாத் மகராஜீன் கதையை அறிந்து கொள்ள ஆவலாக உள்ளேன் என்றாள். சாதுவும் மிக்க ஆர்வத்தோடு ஏகநாதரின் கதையை கூற ஆரம்பித்தார்.

அவர் கூறிய வரலாறை எழுத



வேண்டுமானால் கதை மிக நீண்ட தாகிவிடும். எனவே சுருக்கமாக பகிர்ந்து கொள்வோம்.

மகான் ஏகநாதர் பானுதாசரீடைய பரம்பரையில் வந்தவர். அவர் பிறந்த வருடம் 1533. ருக்மணி சூர்ய நாராயணன் தம்பதியினருக்கு மகனாக அவதரித்தார். தனது 12 ஆம் வயதினில் இறைவனின் ஆணைக்கிணங்க தௌலதாபாத்தில் வசிக்கும் குரு ஜனார்த்தன் சுவாமியை தன் குருவாகப் பெற்றார்.

குரு ஜனார்த்தன் சுவாமியின் உபா சனை தெய்வம் ஸ்ரீ தத்தாத்ரேயர். ஆனால் ஏகநாதர் தன் உபாசனை தெய்வமாக தன் குருவைத் தவிர வேறு எவரையும் ஏற்க மறுத்தார். குருவே அனைத்தும் ஆவார் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை ஏகநாதருக்கு இருந்தது.

ஸ்ரீ தத்தர், ஸ்ரீ பாண்டுரங்கனின் தரிசனம் பெற்றும், தன் குருவே இந்த தெய்வ வடிவங்களாக காட்சி அளித்ததாக நம்பி குருவை மட்டுமே வணங்கி 12 ஆண்டுகள் தவமியற்றி குருபக்தி செய்தார்.

குருபக்தியால் குருவின் ஆணையை

ஏற்று பாகவதம், இராமாயணம் போன்ற நூல்களுக்கு விளக்கம் எழுதினார். ஏகநாதரைப் போல் குருபக்திக்கு தன்னையே அர்ப்பணித்தவர்களில் அரிதானவர் என்று குருவால் பாரட்டப்பட்டவர்.

12 வருடங்கள் குருபக்தி செய்ததன் விளைவாக சிறந்த மகான் ஆனார். கிரிஜா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு குருசேவையை தன் வீட்டில் இருந்தபடியே செய்து கொண்டு தன் வாழ்வைக் கழித்தார்.

ஏகநாதருக்கு பகவான் 36 பகவான் சேவை புரிந்தான்.12 ஆண்டு காலம் ஸ்ரீ தத்தர் ஏகநாதர் வீட்டில் வாயிற் காப்பானாக இருந்தார். 12 ஆண்டுகாலம் விட்டல அவரது வீட்டில் ஜால்ரா போடுபவராகவும் எல்லாவிதத்திலும் சேவை செய்தார்.

ஏகநாதர், காட்டினுள் மறைந்து போன்

" மாவுலி ஞானத்தேவரின் சமாதியை கண்டுபிடித்து கோவில்கட்டி புதுப்பித்து சேவை செய்தார்.

" ஞானேஸ்வரி" என்ற நூலை மீண்டும் புதுப்பித்து மக்களுக்கு வழங்கினார்.

தன் குரு ஜனார்த்தன் சுவாமி தேவ கிரி இராஜ்யத்தில் மேல் கோட்டையில் குகைக்குள் சமாதியடைந்ததும், 1599 ஆம் ஆண்டு ஏகநாதர் கோதாவரி நதியில் ஜலசமாதி அடைந்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். என கதையை கூறி முடித்தார் சாது.

அவர் ஏகநாதரின் கதையைக் கூறக்கூற கண்களில் நீர் வழிய அவரது குருபக்தியை எண்ணி ஆனந்தப்பட்டாள் சுந்தராபாய். அந்த கணத்தில் இருந்து தன் மானசீக குருவாக ஏகநாதரை தன் மனதில் ஏற்றுக்கொண்டாள்.

நான் என் சற்குருவைக் கண்டால் ஏகநாதரைப் போல் குருபக்தி செய்து என் குருவோடு லயமாவேன் என மனதில் உறுதி ஏற்றுக் கொண்டாள்.

பிறகு சாது கூறினார். மகளே! இது விட்டலின் சான்னித்யம் உள்ள தலம். இங்கிருந்து சற்று தூரம் சென்றால், ஏகநாதரின் சமாதி உள்ளது. அருகிலேயே அவரது வீடும் உள்ளது. அங்கே சென்று மனதார தரிசனம் செய்து கொள். முடிந்தால் ஏகநாதரின் குரு ஜனார்த்தன சுவாமியின் சமாதியையும் தரிசனம் செய்து கொள் என வழிகாட்டி சுந்தராபாயிக்கு " ஏகநாத பாகவத்தை" பிரசாதமாக வழங்கினார்.

சுந்தராபாயியும் சாதுவிற்கு நன்றி கூறி வணங்கி ஏகநாதரின் சமாதியைக் காணப் புறப்பட்டாள். கோதாவரி நதிக்கரையில் ஏகநாதரை மனதால் துதித்து அங்கேயே அமர்ந்து இரண்டு நாட்களில் ஏகநாத பாகவத்தை பாராயணம் செய்தாள். மூன்றாம் நாள் அதிகாலையில் பயணம் செய்து ஔரங்காபாத் அருகில் உள்ள


மோகினிராஜ் ஆலயம்

தெளலதாபாத்திற்கு சென்று ஜனார்த்தன் சுவாமியை தரிசித்து தன் சற்குருவை காட்டும் படி தொடர்ந்து இரண்டு நாட்கள் கண்ணீர் மல்க நாமஜபம் செய்தாள்.

அதன்பிறகு ஏகநாதருக்கு விட்டல் காட்சியளித்த சூலிபஞ்சன் என்னும் இடத்தில்தொடர்ந்து இரண்டு நாட்கள் பசி, தூக்கம் களைப்பை மறந்து, தியானம் செய்தாள். மூன்றாம் நாள், அங்கு சுந்தராபாயிக்கு ஓர் அசரீரி கேட்டது. " சுந்தராபாயி நீ அங்கிருந்து புறப்பட்டு ஆலந்திக்கு வா" இவ்வாக்கு காதில் விழுந்த கணம், பகவானைத் துதித்து உடனே தன் சற்குருவைக் காண ஆலந்திக்குப் புறப்பட்டாள்.

இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்ட இடங்கள் யாவும் இன்றளவும் பக் தர்களால் வணங்கப்பட்டு வருகின்றது. பகவான் சாயிநாதர் ஒருமுறை தன் பக்தரான காவாங்கர் என்பவரிடம், என் குருவின் ஆணைப்படி மேற்கு தொடர்ச்சி மலை வழியாக தேவகிரிக்கு வந்தேன்.அங்கு மகானான ஜனார்த்தனன் சுவாமி எனக்கு சேவை செய்து என்னை மகிழ்வித்தார். என்று கூறினார்.

பிறகு ஔரங்காபாத் தூப்கேட் கிராமத்தில் சாந்த்பாடீலுக்கு பாபா தரிசனம் தந்ததை நாம் அறிவோம். ஜனார்த்தனன் சுவாமி வாழ்ந்த காலம் 15 ஆம் நூற்றாண்டு. பாபாவின் வாக்கின்மூலம் மகான்கள் காலத்தை கடந்தவர்கள் என உறுதி கொள்ளலாம். ஸ்ரீ சாயிநாதரின் திருவடிபட்ட இடத்திற்கு நம் சுந்தராபாயி வந்தது எத்தகைய அற்புத லீலை.

தொடரும்...

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, ஸ்ரீமத் பரமசிவனார் சித்தர் சீவபீட சமாதி தரிசனம்.

காஞ்சிபுரம் ஸ்ரீமத் பரமசிவனார் சித்தர்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் கோவில் நகரம் காஞ்சிபுரம் சித்தர் ஸ்ரீமத் பரமசிவனார் சுவாமிகளின் தரிசனம் காண்போம் வாருங்கள்.

ஸ்ரீமத் பரமசிவனார் சென்னை அம்பத்தூரை பூர்வீகமாகக் கொண்டவர். சிறுவயதிலேயே மிகுந்த ஆன்மீகப் பற்றின் காரணமாக பள்ளிப் படிப்பை தொடரவில்லை. சுவாமிகளின் ஆன்மீக ஈடுபாட்டை கண்ட பெற்றோர் அவரை இல்லறத்தில் திருப்ப நினைந்து பார்வதி என்ற மங்கையை திருமணம் செய்து வைத்தனர்.இருப்பினும் சுவாமிகளுக்கு இல்லறத்தில் அவ்வளவு நாட்டம் இல்லை. மாறாக தன்னுடைய ஆன்மீக முன்னேற்றத்திலேயே கவனம் செலுத்தினார்.

காலப்போக்கில் தனது வியாபாரத்தின் பொருட்டு, காஞ்சிபுரம் சென்று வியாபாரத்தின் மூலம் பொருள் சேர்த்து காஞ்சிபுரத்திற்கு அருகில் செவிலிமேட்டில் தன் மானசீக குரு அகத்தியரின் பெயரால், ஸ்ரீ அகத்தியர் மடம் என்ற ஆன்மீக மடத்தை நிறுவி ஆன்மீக அடியார்களுக்கு நாள்முழுவதும் அன்னதானம் செய்து தொண்டாற்றினார். தன்னுடைய வருமானம் அனைத்தையும் அன்னதானத்திற்கே செலவு செய்தார்.

மடத்தில் அகத்தியரின் திருமேனியை நிறுவி, குரு பூர்ணிமா, சித்ரா பவுர்ணமி போன்ற விசேட நாட்களில் பூஜைகள் செய்து ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் அளித்து ஆன்மீகத் தொண்டாற்றினார்.

பல ஆன்மீகப் பெரியோர்களும், சித்தர்களும், மகான்களும் மடத்திற்கு வந்து வழிபட்டுச் சென்றிருக்கின்றனர்.

சுவாமிகள், பொதுமக்களின் உதவியோடு, மடத்தினில் பொதுக் கிணறு ஒன்றை தோண்டி அதைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அளித்தார்.

ஸ்ரீ மத் பரமசிவனார், சென்னை



பிராட்வேயில் உள்ள பவளக்காரர் சத்திரத்தில் ஆயுட் கால உறுப்பினராக இருந்திருக்கின்றார்.

பின்பு வியாபாரத்தை முழுமையாக விட்டுவிட்டு,முழுநேர ஆன்மீகவாதியாக மாறினார். தான் நிறுவிய மடத்திலேயே தவம் இயற்றி அகத்தியரின் அருளைப் பெற்ற சுவாமிகள், தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு, முடி கயிறு கட்டிவிடுவது வழக்கம்.

பெருபான்மையான பக்தர்களின் தீராத பிரச்சனைகளை சுவாமிகள் தவத்தின்மூலம் உரு ஏற்றிக் கொடுக்கும் முடிகயிறே தீர்த்து வைத்தது. எனவே சுவாமிகளை நாடி அநேகம் பக்தர்கள் வரத்தொடங்கினர். பிற்காலத்தில் இவருக்கு அநேக சீடர்கள் உருவாயினர்.

செவிலிமேடு முற்காலத்தில் சிவலிங்கமேடு என்ற பெயரை பெற்றிருந்தது. பிற்காலத்தில் செவிலிமேடு என்று திரிந்திருக்கின்றது. இவ்வூரின் கிழக்கேயும்,மேற்கேயும், இரண்டு கைலாசநாதர் ஆலயங்கள் இருக்கின்றது.

சுவாமிகள் தான் சமாதியாகப்போகும் காலத்தை கணித்து தன் சீடர்களிடம் முன்கூட்டியே கூறியபடி, கார்த்திகை மாதம் மூல நட்சத்திரத்தில் சித்தியடைந்தார்.

தான் சமாதியாகப் போகும் இடத்தை முன் கூட்டியே தேர்வு செய்து அரசாங்க அனுமதி பெற்று தயாராக வைத்திருந்தார்.

சுவாமிகளின் குருபூஜை வருடாவருடம் கார்த்திகை மாதம் மூல நட்சத்திரத்தில் மிக எளிமையாக நடைபெற்று வருகின்றது.

சுவாமிகள் தன் மகன் பழனிச்சாமி அவர்கள் சமாதி அடைந்தால் தன்னுடைய சமாதிக்கு அருகிலேயே சமாதி வைத்து சமாதியின் மேல் நந்தியை வைக்கக் கூறினார்.

காலத்தின் கோலம் அவருடைய சீடர்கள் அவரை செவிலிமேடு மயானத்தில் சமாதி வைத்துவிட்டனர்.

சுவாமிகளின் வாழ்க்கை குறிப்புகளை தந்து உதவிய சுவாமிகளின் பேத்தி ஸ்ரீ

சௌந்தரி அம்மையாருக்கும், கொள்ளுப் பேரன், திரு. பூபதி அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முகவரி;

ஸ்ரீ மத் பரமசிவனார் சுவாமிகள் சீவபீடம்,
அகத்தியர்மடம்,
வந்தவாசி ரோடு,
செவிலிமேடு,
காஞ்சிபுரம்.

(காஞ்சிபுரம் பேரூந்து நிலையத்தில் இருந்து வந்தவாசி செல்லும் சாலையில் செவிலிமேடு பகுதியில் இண்டியன் ஆயில் கார்ப்பரேசன் பெட்ரோல் பங்க் அருகில், செல்வ விநாயகர் ஆலயத்தின் பக்கவாட்டில் சீவ சமாதி அமைந்துள்ளது.)

<u>பேரூந்து மார்க்கம்:</u>

சென்னை கோயம்பேடு காஞ்சிபுரம்
காஞ்சிபுரம் செவிலிமேடு.
இறங்குமிடம்:
செவிலிமேடு பிள்ளையார் கோவில் .

<u>புகைவண்டி மார்க்கம்:</u>

சென்னை எழும்பூர் காஞ்சிபுரம்.
இறங்குமிடம் : காஞ்சிபுரம்.

சித்தர்களை வணங்கி
அவன்தாள் பணிவோம்!
சீரான வாழ்க்கையை
சிக்கலின்றி பெறுவோம்!

- (தொடரும்)



ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

காலத்தை வென்ற
கருவூர் தேவர்

கருவூரார் கொங்கு மண்டலத்தில் கருவூரில் பிறந்தவர். அதனாலேயே கருவூர்த் தேவர் என அழைக்கப்பட்டார். கொங்கு மண்டல சதகம் என்னும் நூலில் கொங்கு நாட்டில் வாழ்ந்த சித்தர்களின் வரிசையில் இவரைப் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் கருவூரான் சித்தர், கருவூரனார் தேவர் என்னும் பெயரில் இருவர் இடம் பெறுகின்றனர். ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா பாடல்களையும், சித்தர் பாடல்களையும் ஆய்வு செய்தால் இருவரும் ஒருவர் அல்லர், வெவ்வேறானர் என்பதை அறியலாம்.

செம்பு, பித்தளை உலோகங்களைக் கொண்டு தொழில் செய்யும் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், இவரது பெற்றோர் ஊர் ஊராகச் சென்று கோயில்களில் பஞ்சலோகச் சிலைகளை அமைக்கும் தொழிலினை மேற்கொண்டனர் என்றும் 'அகத்தியர் தமது 12000 என்னும் பெருநூல் காவியம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.



கருவூரார் வாத இலக்கியம், வைத்தியம் 500, யோக ஞானம் 500, பல திரட்டு, குருநூல் சூத்திரம், பூரண ஞானம், பூஜா விதி, கற்ப விதி, மெய்ச் சுருக்கம் போன்றவை இவர் இயற்றிய நூல்களாம். இவர் திருக்காளத்தியில் சமாதியடைந்து அருள்புரிந்து வருவதாகக் கூறுவர்.

வேதாகமக்கலைகள் பலவற்றையும் கற்றுத் தெளிந்தவர். மிகப்பெரிய யோகசித்தர். போக முனிவரிடம் உபதேசம் பெற்று ஞானநூல்கள் பல வற்றையும் ஆராய்ந்து சிவயோக முதிர்வு பெற்றவர்.

சித்திகள் பலவும் கைவரப் பெற்றவர். உலக வாழ்வில் புளியம்பழமும் ஓடும்போல ஒட்டியும் ஒட்டாமலும் விளங்கியவர். இவர் செய்த அற்புதங்கள் பலவாகும். இவரது செயல்கள் இவரைப் பித்தர் என்று கருதும்படி செய்தன. கருவூர்த்தேவர் கொங்குநாடு, வடநாடு, தொண்டை நாடு, நடுநாடு முதலிய இடங்களில் உள்ள

தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தென்பாண்டிநாட்டுத் திருப்புடைமருதூர் சென்று, இறை வனிடம் திருவடிதீட்சை பெற்றார்.

கருவூர்த்தேவர் நெல்லையில் இருந்து திருக்குற்றாலம் சென்று அங்குச் சிலநாள் தங்கியிருந்து, பொதிய மலையை அடைந்து அகத் தியரைத் தரிசித்து அருள்பெற்றார்.

தஞ்சையில் முதலாம் இராஜ ராஜசோழன் (கி.பி. 9851014) தனது இருபதாம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் கட்டத் தொடங்கிய இராசராசேச்சுரத்துப் பெருவுடையார்க்கு அஷ்டபந்தன மருந்து சார்த்தினன். அம்மருந்து பலமுறை சார்த்தியும் இறுகாமல் இளகிக் கொண்டிருந்தது. அது கண்ட அரசன் வருந்தமடைந்தான்.



அதனை அறிந்த போகமுனிவர் பொதியமலையில் இருந்த கருவூர்த் தேவரைத் தஞ்சைக்கு வருமாறு அழைப்பித்தார். கருவூர்த் தேவரும் தன் குருவின் ஆணைப்படி தஞ்சை வந்து, பெருமான் அருளால் அஷ்டபந்தன மருந்தை இறுகும்படி செய்தருளினார்.

தஞ்சையினின்றும் திருவரங்கம் சென்று பின்னர் கருவூரை வந் தடைந்தார். கருவூரில் உள்ள வைதி கப்பிராமணர் பலர் கருவூர்த் தேவரை வைதிக ஒழுக்கம் தவறியவர் என் றும், வாம பூசைக் காரர் என்றும் பழிச் சொல்சாற்றி தொல்லைகள் பல தந்தனர்.

கருவூர்த் தேவர் அவர்களுக்குப் பயந்தவர் போல நடித்து, ஆனிலை ஆலயத்தை அடைந்து, பெருமானைத் தழுவிக்கொண்டார் என்பது புராண வரலாறு. கருவூர்த் தேவரின் திரு வுருவச்சிலை கருவூர்ப் பசுபதீசுவரர் கோயிலிலும், தஞ்சைப் பெரிய கோயிலிலும் விளங்குகிறது.

இவர், திருக்களந்தை ஆதித்தேச் சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம் பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடைமருதூர் என்ற பத்து சிவத்தலங்கட்கு ஒவ்வொரு பதிகங்கள் வீதம் பத்துத் திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் பாடியுள்ளார்.

கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் முகத்தலை அகத்தமர்ந்து இனிய பாலுமாய் அமுதாம் பன்னக



ஆபரணன் பனிமலர்த் திருவடி இணைமேல் ஆலை அம் பாகின் அனைய சொற் கருவூர் அமுதுறழ் தீந்தமிழ் மாலை சீலமாப் பாடும் அடியவர் எல்லாம் சிவபதம் குறுகி நின்றாரே.

கருவூரார் என்று அழைக்கப்படும் கருவூர்த்தேவர் ஒரு சமயம் நெல் வேலிக்குச் சென்று இருந்தார். நெல்லையப்பரைத் தரிசிக்கும் ஆசையில் கோவிலுக்குச் சென்றார். அப்போது நிவேதன காலம், இறைவனை "நெல்லையப்பா" என்று மூன்று முறை அழைத்தும் இறைவனின் தரிசனம் கிடைக்கவில்லை. "அட, இங்கே நெல்லையப்பன் இல்லை யாப்பா?" என்று இவர் நகைவுடன் கூறவும், கோவிலைச் சுற்றி எருக்கும், வேண்டாத புல் பூண்டுகளும் முளைத்துக் கோவிலை மறைத்து நின்றன.

அங்கிருந்து திரும்பியும் பாராமல் நடந்தார் சித்தர், சித்தனின் கோவம் சிவனையும் நடுங்க வைத்தது. கருவூரார் மானூரை அடையும்போது நெல்லையப்பர் வழிமறித்தார். "அப்பனே இத்தனை கோவம் ஆகாது உனக்கு நீ என்னைக் காண வந்த போது நைவேத்திய நேரம். நான் உன்னுடைய குரலுக்கு செவிசாய்த்தும் பதில் சொல்ல முடியாமல் போயிற்று" என்று பக்குவமாய் சொன்னார். "சரி,

போனது போகட்டும், திரும்பிவா திருநெல்வேலிக்கு" என்று இதமாக அழைத்தார். கருவூரார் சமாதானமாகி நெல்லை நோக்கி நடக்கலானார். அவர் எடுத்துவைத்த ஒவ்வொரு அடிக்கும் ஒரு பொற்காசு என்று கணக்கிட்டு வழங்கினார் இறைவன்.

கார்த்திகை திங்கள் மிருகசீரிடம் அன்று பூச நாளில் ஆரம்பித்து வேப்பமரக் கொழுந்தைக் கிள்ளி இருபத்தேழு நாட்கள் சாப்பிட்டால், பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது. ஒரு மாதம் சாப்பிட்டால் குஷ்ட நோய் விலகும். கொழுந்தை நிழலில் உலர்த்திப் பொடி செய்து மூன்று விரல்களால் எடுக்கும் அளவு பொடியை தேனில் குழைத்துத் சாப்பிட்டு வந்தால் நரை,திரை, மாறும் என்கிற வேம்பின் மகத்துவதை முதன் முதலாகச் சொன்னவர் இவர்,

வாத காவியம், வைத்தியம், யோக ஞானம், பல திரட்டு, குருநூல் சூத்திரம், பூரண ஞானம், மெய்ச் சுருக்கம், சிவஞான போதம், கற்பவிதி, மூப்பு சூத்திரம், பூஜா விதி போன்ற பல தமிழ் நூல்களை நமக்கு வழங் கியுள்ளார். முனிவர்களால் ஞானப் பாலூட்டப்பட்டு வளர்ந்தவர் கருவூரார்.

சிவாலயங்களில் சிவலிங்கத்தை தங்கத்தால் உருவாக்குவதும் பாசுரம் பாடி பக்தி நெறி வளர்ப்பதுமாக ஊரெங்கும் அலைந்து திரிந்தார். சாதி,குலம், நீத்துச் சிவத்தல யாத்திரை செய்து திருவிசைப்பா பதிகங்கள் பாடி வந்தார்.சாதி சம்பிரதாயாங்களை புறக்கணித்தார்.

பல புண்ணியத் தலங்கள் வணங்கி சென்று கஜேந்திர மோட்சம் என்னும் தலத்தை அடைந்து அங்கு இருந்த முன்றீசர் காளியை அழைக்க அவர் தரிசனம் தந்து 'என்ன வேண்டும்' என்று கேட்க, 'மது வேண்டும்'?' என்று கேட்கவே காளி மதுக்குடமளித்தாள். மீண்டும் காளியிடம், 'மீனும் வேண்டும்' என்று கேட்டார். காளி தமது கோட்ட வாசிகளிடம் மீன் கேட்க அவர்கள் எங்கு தேடியும் மீன் அகப்படவில்லை.

கருவூரார் அருகிலிருந்த வன்னி மரத்தை நோக்கவே, அம்மரம் மீன் மாரி பொழிந்தது. பிறகு அவ் வூரைவிட்டு அகன்று விஷ்ணு ஆலயத்தை அடைந்து அங்குள்ள பெருமாளைக் கூவி அழைத்தார். பெருமாள் வராமல் இருக்கவே அக்கோயில் பூஜைகள் இல்லாமல் இருக்கக் கடவது என்று சாபமிட்டு சென்று, திருக்குற்றாலத்தை அடைந்து சிவதரிசனம் செய்து திவிசைப்பார் பாடிப் பொதிகையில் எழுந்தருளியிருந்தார். ,

சிறந்த சிவ பக்தனாக இருந்த சோழ மன்னனுக்கு அப்போது ஒரு சங்கடம் ஏற்ப்படிருந்தது . அந்தச் சோழ மன்னன் கனவில் ஒருநாள் நடராஜ தரிசனம் கிடைத்தது. அந்த நாளிலிருந்து கனவில் தரிசனம் கண்ட நடராஜரைப் போன்றதொரு சிலையைப் பொன்னால் செய்து தர வேண்டும் என்று சிற்பிகளை வரவழைத்து ஒரு தூலம் பொன்னை நிறுத்திக் கொடுத்தான்.


ஏனோ தெரியவில்லை சிலை செய்யும் பணியில் சிக்கல் ஒன்று முளைத்துக் கொண்டே இருந்தது. பொன் வார்ப்பு நிலைத்து நிற்காது

இருந்தது. அதனை கண்ட சிற்பி மனம் நொந்து போய் இறைவனை வேண்டி நின்றனர். "நீங்கள் என்ன செய்வீர்களோ தெரியாது நான் சொன்ன கெடு தேதிக்குள் நடராஜர் சிலை தயாரித்திருக்க வேண்டும். இல்லையெனில் எல்லோரையும் கழுவில் ஏற்றிவிடுவேன்'' என்று மன்னன் ஏற்கனவே கட்டளையிட்டிருந்தான்.

அதன் காரணமாகவே சிற்பிகள் மனம் நடுங்கி புலம்பிக் கொண்டிருந்த போது அங்கே கருவூர் சித்தர் வந்து சேர்ந்தார். "ஏன் இப்படி நெஞ்சம் பதைபதைத்து நிற்கிறீகள்? உங்கள் கலக்கத்தை நான் போக்குகிறேன். நீங்கள் எல்லோரும் சற்று வெளியே சென்று இருங்கள்.

நான் சிலையை வார்த்துத் தருகிறேன்." என்று கருவூரார் சொன்னதும் யாவரும் வெளியே சென்றனர். கருவூரார் பொன்னை உருக்கி அதில் ஒரு துளி செந்தூரத்தைப் போட்டார். அதன் பிறகு அதனை அச்சில் வார்த்தார். அச்சிலிருந்து வார்த்து எடுக்கப்பட்ட நடராஜர் சிலையைக் கண்டு எல்லோரும் வியப்பெய்தினர்.

சோழ மன்னன் செய்தியறிந்து ஓடோடி வந்து பார்த்தான்.தான் கனவில் கண்ட நடராஜர் தரிசனத்தை அந்தச் சிலையின் ஒளியிலும் வார்ப்பிலும் கண்டு திகைத்துப் போனவன் முகம் கருத்துப் போனது. "நான் பத்தைரை மாற்றுத் தங்கம் அல்லவா



கொடுத்திருந்தேன். நீங்கள் அதனை திருடி எடுத்துக் கொண்டு செம்பால் சிலை செய்து விட்டிருக்கிறீகள் அப்படிதானே?" என்று சிற்பிகளை சினம் கொண்டு பார்த்த போது அவர்கள் பயந்து நடுநடுங்கிப் போனார்கள்.

"அரசே! இந்த சிலையைச் செய்தது நாங்கள் இல்லை.இந்த கருவூரார்தான் செய்தார்" என்று அவரை சுட்டிக்காட்டினர். 'அப்படியானால் அந்தக் கருவூராரை சிறையில் தள்ளுங்கள்'என்று சோழ மன்னன் ஆணையிட்டு சிறையில் தள்ளினான். திருமூலர், சோழ மன்னன் செய்த

அபாண்ட செயலினை கேள்வியுற்று அங்கு வந்து சேர்ந்தார்.

” கருவூரார் பெருஞ்சித்தர். உனக்கு தங்கத்தின் மீதுள்ள ஆசையால் அவர் மீது வீண்பழி சுமத்தி விட்டாய். நீ கொடுத்த எடைக்குச் சமமாக வெள்ளியைக் கொண்டு வந்து உருக்கு’ என்று திருமூலர் கூறியதும் மன்னன் அவ்வாறே செய்தான்.

அப்போது உருக்கிய வெள்ளி மீது ஒரு துளி செந்தூரத்தை தூவ உருக்கிய வெள்ளி பத்திரை மாத்து தங்கமாக மாறியது. ‘‘மன்னா நீ ஆசை என்ற பெரிய மாயையில் வாழ்கிறாய். ஆசை போய்விட்டால் உண்மையான பரவெளியை உணர்ந்து கொள்வாய். செல்வம் யோகியை வசப்படுத்த முடியாது. ஆனால் யோகிக்கு செல்வம் வசப்படும்” என்று திருமூலர் உபதேசம் செய்தார். இதனால் கருவூரார் புகழ் பரவ பவர அவர் மீது பொறாமையும், பகைமையும் கொண்டோரின் எண்ணிகையும் ஏராளம் முளைத்தது.

வேதியர்கள் அவர் மீது எண்ணற்ற குற்றச்சாட்டுகளையும், புகார்களையும் மன்னனிடம் தொடர்ந்து உரைத்தனர். மன்னன் அறிவான் மகான் அவரென்று. எனவே புகார் பலன் தரவில்லை.

மன்னன் அவரைத் தண்டிக்க எண்ணாததைப் புரிந்து கொண்ட வேதியர்கள் ஒருநாள் கருவூராரை கொல்வதற்கு ஆயுதங்களுடன் துரத்த, அவரோ ஓடிச்சென்று சிவலிங்கத்தைத் தழுவிக்கொள்ள சிவபெருமானுடன் ஜோதியில் கலந்தார் என்றவாறு இவரின் கதை அபிதான சிந்தாமணி என்ற நூலில் காணப்படுகிறது.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000



நம்ம வீட்டு நிச்சயதாம்பூலம்

சுவாமிமலை சீரடி சாய்பாபா சமுதாய நலக்கூடத்தின், ஸ்தாபகர்களில் ஒருவரான திரு.புருஷோத்தன் நாயுடு அவர்களின் குமாரரும், நமது அன்புக்குரியவருமான,

திரு. P.வீராச்சாமி வசந்தி ஆகியோரின் புதல்வி செல்வி. V.தனலெட்சுமி செல்வன் விவேக் பாலாஜி ஆகியோரது நிச்சயதார்த்தப் பெருவிழா, விபூதி சித்தர், திரு. சாய் மெய்யடிமை அய்யா அவர்களின் நல்லாசியுடன், சாய் சத்சரிதம் தமிழாக்கத்தின் ஆசிரியர் திரு. சொக்கலிங்கம் சுப்பிரமணியன், திரு.ஆர். ஈஸ்வரன், திரு.பி.பத்மநாபன், திரு.பழனிவேலு திரு. குடந்தை ஜெயராமன் ஆகியோரது முன்னிலையில், ஆன்றோர்களும், சான்றோர்களும் வாழ்த்த, பகவான் சாயிநாதரின் பரிபூரண ஆசியால், கடந்த 27.3.22 ஞாயிற்றுக்கிழமை காலை 10 to 12 நிச்சயதார்த்த நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பாபா பக்தர்களும், உறவினரும், நண்பர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு வாழ்த்தினார்கள் அனைவருக்கும் சீரடி சமுதாய நலக்கூடத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றோம்.

இல்லற வாழ்வில் இணையும் பாபாவின் குழந்தைகள் அனைத்து செல்வங்களும் பெற்று, ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்வாங்கு வாழ்க வளமுடன் என்று நாமும் மனதார வாழ்த்துவோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், விட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

பாபாவின் தோழி
Dr.வின்னி சிட்லூரி



வின்னி மா அனை வரையும் ஆசீர்வதித்து, வழிநடத்தி, நம்மை அவரது அருளுக்கு உரியவராக்கட்டும்.

அவர் தன்னை பாபாவுடன் இணைத்துக் கொண்ட இப்புனித நன்னாளில் பாபாவால் தேர்ந்தெடுக் கப்பட்டு, ஆசீர் வதிக்கப்பட்ட ஒரு நல்லடியாரைப் பற்றி எழுது வதில் பெருமை கொள்கிறது சாய் மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ்.

இவரைத் தன் மகளென தேர்ந் தெடுத்து தனக்கு அருகிலேயே வைத் துக்கொண்டு, அவர் மூலம் தனது வழியில் பலரையும் நடத்திச் செல்ல இவரைப் பாபா பணித்திருக்கிறார்.

வெகு சில புண்ணியம் பெற்றவர்கள், பாபாவின் 'கர்ம பூமி'யான ஷீர்டிக்கு செல்லும் போதெல்லாம் இவரைச் சந்திப்பதும், இவரோடு நேரத்தை செல விட்டதும் அவர்களின் பாக்கியம். இவரை பக்தர்கள் தீதி என்றே அழைத்தனர்.

இவரைச் சந்திக்கும்போது, பாபாவின் பக்தி உணர்வு மேலும் அதிகமாகிறது. பாபாவின் மீதான அன்பு இன்னும் கூடுகிறது. நேரம் போவதே தெரியாமல் நமது ஆணவமும் கரைந்து போகிறது. இவரது சந்திப்பு நமது உள்ளுணர்வைத் தூண்டிவிட்டு, நம்மை சுய பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும்.

பாபாவின் கர்ம பூமி இப்போது இவருடைய கர்ம பூமியாகி விட்டது. 'தீதி' என பக்தர்கள் அழைத்தாலும், இவர் அதற்கும் மேலானவராகிறார்.

'மாயி' என அன்புடன் அழைக்கப் படும் இவர் பாபா சேவையில் தன்னை முழுதுமாக ஈடு படுத்திக்கொண்டு, இன்னும் பலரையும் ஒவ்வொரு அடியாக சேவையில் ஈடுபடுத்தி உதவி செய்கிறார்.

இந்தப் பதிவைப் படிப்பவர்களே இவர் யார்? இவரது பெருமை என்ன? என்பனவற்றைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம். ஏனெனில் இவர் இப்போது பூவுலகில் இல்லை. கடந்த 24.3.22 வியாழன் அன்று தன் பூத உடலை நீத்துவிட்டு பாபாவுடன் கலந்து விட்டார்.

ஏனெனில் இந்த உலகம், கடவுளே மனித உருவெடுத்து நம்முடன் வாழ்ந் தாலும், அவர் மறைந்தால்தான் அவரை நம்பும். ஏன் என்றால் இறந்ததற்குப்பின் எவர் அதிசயம் செய்கின்றாரோ, அவரே புனிதர் பட்டத்திற்கு தகுதியானவர் என்றல்லவா மனித இனம் சட்டம்





இயற்றி வைத்திருக்கின்றது.?

தமிழ்நாட்டில் உள்ள நீலகிரி மாவட்டத்தில், அரவங்காடு என்னும் ஊரில் 1943ல் நான்கு குழந்தைகளில் இளையவராகப் பிறந்தவர் வின்னி சிட்லூரி. அவரது தந்தை ஒரு தீவிர நாத்திகர். பாட்டி இறையன்பு மிக்கவர். அவர் பிறந்தது முதல் அவரின் தாய் மிகவும் நோய்வாய்ப்பட்டு, சாவின் விளிம்பில் இருந்து வந்தார். பல மருத்துவர்களிடம் காட்டியபின், இறுதியாக வேலூரில் இருக்கும் கிறுஸ்தவ மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

அங்கே அவறுக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து, பல பரிசோதனை களுக்குப் பின், இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று வீட்டுக்கு எடுத்துச் செல்லச் சொல்லிவிட்டார்கள்.

ஒருநாள், 'ஹிந்து' நாளிதழில் பூஜ்யஸ்ரீ. நரசிம்ம சுவாமிஜி என்பவர் கோயம்புத்தூரில் இருக்கும் நாகசாயி ஆலயத்துக்கு வருவதாகச் செய்தி வந்திருந்தது. பாபாவின் அருளால் இவர் செய்துவரும் அற்புதங்களைப் பற்றியும், குறிப்பாக நோயைக் குணமாக்குவதைப் பற்றியும் விரிவாகப் போட்டிருந்தனர். அவரது தந்தை மனைவியை அங்கே கூட்டிச் செல்வதென நிச்சயித்தார்.

இது 1949ல் நிகழ்ந்தது.

அதற்கு முல்நாள் இரவு அவரின் தாய் வெண்ணிறத் தாடி வைத்த ஒரு பெரியவர் பல அன்பர்கள் சூழ்ந்திருக்க, கஃப்னியும், குர்தாவும் அணிந்து ஒரு பல்லக்கில் உட்கார்ந்திருப்பது போல ஒரு கனவு கண்டார். மறுநாள் நடக்கப்போவதை அறியாத அவர் தன் கணவரிடம் இந்தக் கனவைச் சொன்னார்.

'உனக்கு என்ன வேண்டும்? பதவி உயர்வா? பணமா? குழந்தையா? அல்லது புகழா?' என அவரின் தந்தையைக் கேட்க, அவரோ அவரின் மனைவியைக் காட்டி, 'இதோ, இவள் மிகவும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இவளைக் குணப்படுத்துங்கள். எனக்கு வேறொரு மனைவி கிடைப்பாள். ஆனால் என் பிள்ளைகளுக்கு ஒரு தாய் கிடைக்க மாட்டாள்' என வேண்ட, சுவாமிஜியும் தன் கைகளை என் தாயின்

தலை மீது வைத்தார். 'ஜில்லென்று குளிருகிறதே' என அவரின் அம்மா சொல்ல, மீண்டும் தன் கைகளை வைக்க, 'இப்போது சூடாக இருக்கு' என்றாள்.

'ஆஹா!' எனச் சொன்னவண்ணம் பாபாவின் உதியை அவள் கைகளில் தந்து, 'அச்சுதா, அனந்தா, கோவிந்தா' எனும் மந்திரத்தை நாளொன்றுக்கு 21 தடவை வீதம் 21 நாட்களுக்கு உச்சரித்து, உதியை நெற்றியில் அணிந்து, சிறிதளவைத் தண்ணீரில் கலந்து குடிக்கும்படி உபதேசித்தார்.

இதெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, வின்னிமா கதவருகே நின்றிருந்து அந்த வெண்தாடி வேந்தரையே பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு கிருஸ்துமஸ் தாத்தாவைப்போல் அவர் காட்சியளித்தார்! அவரது தாடியை வருட வேண்டுமென ஒரு அவா எழுந்தது. அப்போது அவர் சிறுமியாய் இருந்த வின்னிமாவை அழைத்து, தன் மடியில் உட்கார்த்திக் கொள்ள,அவரும் அவர் மார்பில் சாய்ந்துகொண்டு, அந்தத் தாடியை லேசாக வருடி விளையாடினாள்

அவர் தலை மீது கை வைத்து வின்னிமாவை ஆசீர்வதித்தார். அவரது ஆசியாலும், பாபாவின் அருளாலும் அவரின் தாய் விரைவில் குணமுற்றார். அவரின் தந்தையும் ஒரு தீவிர பாபா பக்தர் ஆனார்.

சில காலம் கழித்து சென்னை சென்று பி.வி நரசிம்ம சுவாமிக்கு நன்றி கூற அதற்கு அவர், 'நான் செய்தது ஒன்றுமில்லை. எல்லாம் பாபாவின் அருளே! அவருக்கே உங்களது நன்றியைக் கூறுங்கள். அதிருக்கட்டும், ஓ பிரபு, நீங்கள் மத்திய இந்தியாவுக்குச் சென்று அங்கு பாபாவின் புகழைப் பரப்புங்கள்' எனச் சொல்லி, உதியும், பாபா படத்தையும் கொடுத்தனுப்பினார்.

அவர் சொன்னதன் அர்த்தம் புரியாமல் அவரின் தந்தை சற்று குழம்பினார். ஆனால், சிறிது நாட்களிலேயே மத்திய பிரதேசத்தில் இருக்கும் ஜபல்பூருக்கு மாற்றலானார். அங்கே அவர்கள் வியாழக் கிழமை பூஜையை ஆரம்பித்தார்கள். சிறிது காலத்தில் வின்னிமாவின் தந்தை ஒரு பாபா ஆலயம் கட்டினார்.

அடிக்கடி பாபாவின் அறிவுரைகளை அவர்களுக்கு நினைவூட்டுவார். கடுகளவு செய்யும் பாபா பிரசாரமும் மலையளவு ஆகும் என்பார். அடிக்கடி ஷீர்டி சென்றும், பாபாவைப் பற்றி கட்டுரைகள் எழுதியும், ஸத் சங்கம் நடத்தியும் வந்தார்.

பள்ளிப் படிப்பை முடித்து ஜபல்பூர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார் வின்னிமா. 1963ல் ஷீர்டி சென்றார்கள். ஸாயிநாத் மருத்துவமனை அப்போதுதான் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே இலவச சேவை செய்வதாக உறுதி பூண்டார்கள் மருத்துவ மேல் படிப்பை தில்லியில் இருக்கும் கலாவதி சரண் மருத்துவ மனியில் தொடர்ந்தார்.

பின்னர், அமெரிக்கா சென்று, குழந்தை நல மருத்துவராகப் பணியாற்றினார். இதற்கிடையில் பாபாவுக்கு கொடுத்த வாக்கை சுத்தமாக மறந்து போர்கள். ஆண்டுகள் உருண்டோடின. என் உள்மனதில் 'இதெல்லாம் தேவையா?' எனும் ஒரு குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது.

அவரது தந்தை சொன்ன அறிவுரையும் அவ்வப்போது வந்து போனது. இரண்டையும் அப்போது அலட்சியப் படுத்தினார்கள்.

ஆனால் தொடர்ந்து ஒலித்த இந்த குரலுக்குக் கட்டுப்பட்டு, தன் பணியின் உச்சத்தில் இருந்தபோது, ஒருநாள் அதை உதறிவிட்டு சீரடி திரும்ப முடிவெடுத்தார் வின்னிமா.

1994லிருந்து சீரடியில் தங்க ஆரம்பித்தார்கள். இருப்பினும் மருத்துவ மனையில் அவர்களால் தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை. ஒரு சில சேவைகளைச் செய் தாலும் அதையெல்லாம் பிரசாரம் எனச் சொல்ல இயலாது அல்லவா?



எனவே வின்னிமா தனது 50 வது வயதில் தன் மருத்துவத் தொழிலில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சீரடியை அருகிலேயே கொராலே என்னும் சிறிய கிராமத்தில் பாபா பக்தர்களுக்குண்டான சேவைக்கெனவே ஸ்ரீ இராதாகிருஷ்ணாயி ஹால் என்ற சேவா மையத்தை நிர்மானித்து அநீக பாபா பக்தர்களுக்கு சேவை செய்தவர் வின்னிமா.

வின்னிமாவுடன் பழகியவர்களுக்கு ஸ்ரீ ராதாகிருஷ்ண மாயியையே வின்னிமா உருவில் சீரடியில் வாழ்ந்ததாகத்தான் உணர்வார்கள்.

அவர் காட்டிய அன்பு, குரு பக்தி, கீழ்ப்படிதல், கடின உழைப்பு, ஸாயி புகழைப் பரப்புதல், இதற்கெல்லாம் மேலாக ஒரு கண்டிப்பான தாயன்பு இவற்றையெல்லாம் வின்னிமாவிடம் நாம் எப்போதும் காணலாம்.

தம்மிடம் வரும் அனைவருக்கும் இங்கிருக்கும் அனைத்து புனித இடங்களையும் சுற்றிக்காட்டி, சாயி நடந்த, உரையாடிய, நின்ற, குளித்த பல இடங்களையும் காட்டித் தருகிறார். இவையெல்லாம் ஷீர்டியில் இப்போது அழியும் நிலையில் இருக்கின்றன. [புனித இடங்கள் எல்லாம் இடிக்கப்பட்டு வியாபாரத் தலங்களாக மாறும் அவலத்தைக் கண்டு மனம் நோகின்றது].

கோரலே மந்திரை ஸ்ரீ ராதா கிருஷ்ணமாயி எனப் பெயரிடும்படி ஸாயிதான் வின்னி மாவிற்கு குறிப்பு தந்திருக்க வேண்டும் அவரைப் போலவே இவரும் செய்துவரும் சேவையில்தான் என்னவொரு ஒற்றுமை!

மாயியை நாம் இவர் வடிவில்

காணலாம் என்பதே உண்மை.

ஸ்ரீ ராதாகிருஷ்ண மாயி ஷீர்டி ஸாயிபாபா மந்திர் கோரலே, ஷீர்டி.'

பாபாவின் பிரதிமை தாங்கிய ஆலயமல்ல இது. ஒரு சாவடி, த்வாரகா மாயி மற்றும் ஒரு பெரிய கூடத்தில் 'குடையின் கீழே பாபா நின்றிருக்கும்' படமும் இருக்கின்றன. இந்தக் கூடத்தில் கிராம மக்களுக்கான பல்வேறு சேவைகளும் நிகழ்கின்றன.

'அன்னதானம்' வயிறார அவலுணவும், தேநீரும் இங்கு வந்துபோகும் யாத்ரீகர்களுக்குத் தரப்படுகிறது. ஸாயியைத் தரிசிக்க உள்ளன்போடு வரும் இவர்களில் ஒரு சிலர் இங்கே இரவில் தங்கிச் செல்கின்றனர். அவர்களுக்கு இரவு உணவும் கிடைக்கிறது. இதைத் தவிர, விழாக் காலங்களில் கிராமத்தினருக்கு பிரசாதமும் வழங்கப் படுகிறது.

'முதலுதவி' ஸ்ரீராம நவமியின்போது மும்பையிலிருந்து ஷீர்டி வருகின்ற பாத யாத்ரீகர்களுக்கும், கிராமத்தினருக்கும் முதலுதவி தரப் படுகிறது. சமீபத்தில் காலராவால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைக்குக்கூடச் செல்ல இயலாத கிராமத்தினருக்கு, மருத்துவர்களை வரவழைத்து, இந்தக் கூடத்திலேயே தேவையான மருத்துவ வசதி தரப்பட்டது.

13000 முதல் 14000 வரையிலான பக்தர்களுக்கு மாதந்தோறும் அன்ன தானம் நடக்கிறது. இவர்களில் 6000 பேருக்கு முழு உணவும், 7000 பேருக்கு சிற்றுண்டியும் தரப்படுகிறது. சுமார் 200 பேர் இரவில் தங்கிச் செல்கின்றனர்.

சீரடி செல்லும் பக்தர்கள் அவசியம் அருகில் உள்ள கோரலே ஸ்ரீ இராதாகிருஷ்ண மாயி ஆலயம் சென்று பாபாவையையும், பாபாவின் தோழியாகிய டாக்டர் வின்னிமா அவர்களையைம் தரிசித்து ஆசி பெற்று கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

மவுனம்

சொல்லுக சொல்லில் பயன்உடைய; சொல்லற்க

சொல்லில் பயன்இலாச் சொல்.

முழு மௌனமாக இருப்பது அல்லது இடைவிடாது தொண தொண வென்று பேசிக்கொண்டிருப்பது என இவ்விரண்டுமே விரும்பத்தக்கதல்ல. அளவறிந்து பேசுவதே மிகச் சிறந்தது. அவசியம் ஏற்படும் போது பேசவேண்டும். அதுவும் அளந்து பேச வேண்டும் என்பதை உணர்ந்து பேச வேண்டும்.

வீண் பேச்சால் நாம் சேமித்திருக்கும் சக்திதான் விரயமாகும். வீண் பிரச்சனை களும் உண்டாகும். உங்களது பொன்னான காலமும் கரையும். அதிகமாகப் பேசி பகை வர்களை நீங்களே தேடிக் கொள்ளாதீர்கள்.

அதிகம் பேசுபவன் விதைக்கின்றான். பேசாமல் மவுனம் காப்பவனே அறுவடை செய்கின்றான்.

எனவே அவ்வப்போது மவுன விரதத்தை கை கொள்வது நல்ல பழக்கமாகும். மவுனம் பொன்னானது. கலகம் வராது காக்கும். மனமும் அமைதியாகும். உயிர் சக்தியும் விரயமாகாமல் காக்கப்படும். அதன் மூலம் நமக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிட்டும். உடல் நலம் மேம்படும்.



ஸ்ரீ சுவாமி சமர்த்த மஹராஜ்
சேவா சமஸ்தான்

உத்திரமேரூர் தாலுக்கா காஞ்சி புரம் அருகே உள்ள மருதம் என்ற மாருதிபுரத்தில் சுவாமி சமர்த்தரின் அனுகிரத்தினால், ஸ்ரீ சுவாமி சமர்த்த மஹராஜ் சேவா சமஸ்தான் (குரு பாதுகா சேத்திர இராஜ்யம்) ஆலய கட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆலயம் ஓர் அற்புதமான இயற்கை சூழலில் அமைக்கப்பட்டு





வருகின்றது. புதிதாக கட்டப்பட்டு வரும் ஆலயத்தின் அருகே மிகப்பெரிய தடாகம் அமைந்துள்ளது.

ஒரு ஆலயத்திற்கு ஸ்தலம், மூர்த்தம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாக அமைய வேண்டும் என்று சான்றோர்கள் கூறுவர். இவ்வாலயம் அமையும் ஸ்தலம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மகான்கள் வாழ்ந்த இடமாகும். அவர்கள் உபயோகப்படுத்திய தீர்த்தக் குளம் இக்காலகட்டத்தில், தூர்க்கப்படாமல் இன்றும் நமக்கு கிடைத்திருப்பது. மகான்களின் கருணையே ஆகும்.

இன்னும் சொல்லப் போனால் புராதனமான இந்த ஸ்தலம் மீண்டும் புணருத்தாரணம் பெறுவதே இந்த தீர்த்தத்தின் சிறப்பை பக்தர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே! அவ்வளவு மகிமை வாய்ந்தது இந்த தீர்த்தம்.

அடுத்ததாக இத்தலத்திற்கு பெருமை சேர்க்கப்போகும் மூர்த்தம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று. ஆம், தத்தாத்ரேயரின் அவதாரங்களான,

சீரடி சாய்பாபா, ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ் சுவாமி சமர்த்தர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஆகிய மும்மூர்த்திகளே இங்கு மூர்த்தங்களாக அமையப்போகின்றன.

அத்தோடு மட்டுமல்ல, நாக தேவனாகிய நாகராஜா இங்கு காவல்தெய்வமாக வீற்றிருக்கின்றார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஸ்தலத்தில் நான் இல்லாமலா என்றவாறு ஆலயம் கட்ட ஆரம்பித்ததில் இருந்தே இங்கு வசிக்க வந்துவிட்டார் வீர ஆஞ்சநேயர்.

ஆலயத்தின் கட்டிட வேலைக்கு, இல்லை, இல்லை, சேவைக்கு தன்னையே அர்பணித்து, இரவும் பகலுமாக பணியாற்றிவரும் கணவன் மனைவியாகி திருமதி.கோமதி ஆறுமுகம் அவர்களே அதற்கு சாட்சி. "நாங்கள் சற்று கண் அயர்ந்தாலும், என்ன இன்னும் தூங்குகின்றீர்கள் எழுந்து வேலையைப்

பாருங்கள் " என்று அய்யா வந்து எங்களை எழுப்பி விடுவார். தினமும் அய்யாவை நான் பார்த்துக் கொண்டே இருக்கின்றேன் என்று கண்ணீர் மல்க வெள்ளந்தியாகக் கூறுகின்றார்.

ஆலயம் அமையும் முன்னே, பல அதிசயங்களுக்கு புகலிடமான இவ் வாலயத்தை கட்டும்பணிக்கு தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்பணித்து ஆயிரம் குடும்ப பிரச் சனையையும் பொருட்படுத்தாது, கண்துஞ்சாது, கருமமே கண்ணாக செயல்பட்டுவரும் அன்புச்சகோதரி திருமதி. மஞ்சரி மகேஷ்பாபுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அந்தளவிற்கு தகுதியான ஆத்மா சகோதரி அவர்கள்.

ஒரு சாதாரண குடும்பத்தலைவி ஒரு ஆலயத்தை நிர்மாணிக்கமுடியுமா என்றால் முடியும் என்று நிரூபித்திருக் கிறார் திருமதி. மஞ்சரி அவர்கள். பெண் இனத்திற்கு நீங்களும் ஒரு முன் மாதிரிதான் சகோதரி. இப் பணிக்கு இறைவன் இவரை தேர்ந்தெடுத்த கதையை கூறவேண்டுமானால் அது தனிப்புத் தகமாக ஆகிவிடும். எனவே சுருங்கக் கூறுகிறேன்.

2007 ல் இருந்து அடிக்கடி தனக்கு ஏற்பட்ட அமானுஷ்யமான அரூபக்காட்சிகளில், பெருமாளின் தரிசனம், குளக்கரை, ஆலமரம், நாகர், பொன்றவைகள் தோன்ற, காரணம் புரியாது தடுமாறியிருக்கின்றார். அதன்பிறகு 2013 ல் தனது இஷ்ட தெய்வம் சீரடி சாய்பாபாவிற்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று மனதினுள் அவா எழும்பியிருக்கின்றது.

தன்னுடைய எண்ணங்களை, தனது பூர்வ சென்ம புண்ணியங்களால் தனக்கு கிடைத்திருக்கும் அப்பா ஸ்தானத்தில் இருக்கும் தன்னுடைய ஆன்மீக வழிகாட்டியும், "பாராயணப் பகலவனுமான" திரு. சுந்தர் சாயிடம் பகிர்ந்திருக்கின்றார். சாயி அவர்களோ ஸ்ரீ அனுமன் சாலிசாவை பாராயணம் செய்! பகவானின் அனுக்கிரகம் நீ ஆலயம் கட்ட வேண்டும் என்று இருந்தால் நிச்சயம் நிறைவேறும். என்று ஆசிகூற அந்த வாக்கு இன்று ஆலயம் நிறைவேறும் தருணத்தை உருக்கியிருக்கின்றது.

ஆலயம் கட்டுவதற்கு ஆரம்பத்தில் ஊர்காரர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றார்கள். எல்லா எதிர்ப்புகளையும் மீறி பகவானின் அனுகிரகத்தினாலும், மகான்களின் ஆசியாலும், ஆலயம் முடியும் தருவாயில்





இருக்கின்றது. இப்போது யார் எல்லாம் எதிர்த்தார்களோ அவர்களே முன்வந்து ஆலயத்திற்கு தொண்டு செய்கின்றார்கள்.

2021 ல் பூமி பூஜை போடப் பட்டு, தனக்கு ஏற்பட்ட அரூபக்காட்சிக ளின்படி தன் எண்ணங்களை சகோதரி மஞ்சரி அவர்கள் விவரிக்க, பொறியாளர் திரு. ஜெயக்குமார் அவர்கள் அதற்கு செயல் வடிவம் கொடுத்து ஆலயத்தை உருவாக் கியிருக் கின்றார். ஆவயத்தின் கீழ்பகுதி யில் தத்தரின் பாதுகைகள் அமைக்கப்பட இருக்கின்றன. அதைச்சுற்றி தியானம் செய்வதற் குண்டான அமைப்புகள் இயற்கை யாகவே அற்புதமாக உருவாகி இருக்கின்றன.

ஸ்ரீ குரு தத்த பரம்பரையின் உன்னத வழிகாட்டுதலால் கட்டப்பட்டு வரும் சத்குரு பாதுகா தியானாலயத்தின் கட்டுமானத்திற்கும், இந்த தெய்வீக ஆணையை விரைவுபடுத்துவதற்கும், நிறைவு செய்வதற்கும், சுற்றிலும் உள்ள ஸ்ரீ தத்தா பக்தர்களின் பணப் பங்களிப்பின் மூலம் குரு சேவையில் பங்கேற்பதை நாங்கள் நாடுகிறோம். சத்குரு கிருபா இந்த உலகில் நிலவும்





இந்த சோதனையான சூழ்நிலையில் அனைவருக்கும் அரு ளட்டும். வங்கி விவரங்கள் மற்றும் G-pay எண்:

Account Holder: SWAMI SAMARTHA MAHARAJ SEVA SAMASTHAN

Account Number: 50200057752558

IFSC: HDFC0000879

Branch: KANCHIPURAM

Account Type: CURRENT

Virtual Payment Address:9940941049@hdfcbank



சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி.லோகேஸ்வரி லோகேஸ்வரன்,

குழந்தை விஷாகன், சென்னை: ரூ.3000.

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர்: ரூ.3000.

திரு.பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி. ரூ.2000

திருமதி.ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்: ரூ.2000.

Smt.Neelam, Bangalore: Rs.1000.

திருமதி.சுகன்யா துரைராஜ், சென்னை: ரு.1000.

திருமதி.துளசி, திருவரங்கம், அயனாபுரம்: ரு.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த், அயனாவரம்: ரூ.800

திரு.கேஸ்வர், ஈரோடு: ரூ.500

திரு.சிவக்குமார் ஹேமரம்யா குடும்பத்தார், அவிநாசி: ரூ.500

திருமதி.இந்திரா வெங்கடாசலம், மந்தைவெளி: ரூ.500

திருமதி.சாந்தி, மந்தைவெளி: ரூ.500

திருமதி.ஜெய தேனிஷா ரகுபதி ராஜா, கொளத்தூர்: ரூ.500

திரு.சாய் ஹரி, AYK: ரூ.500

திருமதி.பாக்கியவதி, ராணிப்பேட்டை: ரூ.400

திரு. சரத்குமார், திருவள்ளூர்: ரூ.301

திரு.சாந்த மூர்த்தி, போரூர்: ரூ.340

திருமதி. லலிதா மாமி, ரூ.310

திருமதி.லதாபாபு, வேப்பம்பட்டு: ரூ.200

திருமதி.லோகீஸ்வரி கார்த்திக், மதுரை: ரூ.200

திருமதி.இராமலட்சுமி கார்த்திக், மதுரை: ரூ.200

திருமதி. விஜயா, சத்தியமங்கலம்: ரூ.201

திரு.கே.ராமமூர்த்தி, ஓய்வு, அசோக் லேலண்ட், கொளத்தூர்: ரூ.200

திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ், பெரியார் நகர்: ரூ.200

திருமதி. ஜானகி சீனிவாசன், கொளத்தூர்: ரூ.200

திரு.தனபாலன், பொழிச்சலூர்: ரூ.107

திருமதி. வரலட்சுமி பிரபாகரன், அயனாவரம்: ரூ.101

திருமதி.சாந்தி மோகன், AYK: ரூ.100

திருமதி.அபிராமி அசோக், AYK: ரூ.100

திருமதி.பத்மா, AYK: ரூ.100

திரு.மதன், சாய் குகா பார்மா, அயனாவரம்: ரூ.100.

சிவா அரிசி மளிகை ரூ.50.

பெரியார் நகர் பாபா பக்தர்கள்: ரூ.50

திரு.அகஸ்டின் குடும்பத்தார், குன்றத்தூர்: அரிசி.1



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. இரவி, குடந்தை: ரூ.600
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார், பெரவள்ளூர்: ரூ.200
திர்மதி.பார்வதி, தஞ்சை: ரூ.200
திரு.ஜானகிராமன், பரவை: ரூ.200
திரு.வேணுகோபால், நங்கநல்லூர்: ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.